بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 10

இதழ் 45

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ஜமாதில் அவ்வல் 14 ★
ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - நுபுவ்வத் 06 ★ 06 நவம்பர் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

مِنۡ قَبۡلُ ہُدًی لِّلنَّاسِ
وَاَنۡزَلَ الۡفُرۡقَانَ ؕ اِنَّ الَّذِیۡنَ کَفَرُوۡا
بِاٰیٰتِ اللّٰہِ لَہُمۡ عَذَابٌ شَدِیۡدٌ ؕ
وَاللّٰہُ عَزِیۡزٌ ذُو انۡتِقَامٍ ۝

**பொருள்**

(அவை) இதற்கு முன் மக்களுக்கு வழிகாட்டியாக (இருந்தன). மேலும் மறுக்க முடியாத உண்மையையும் (அதாவது குர்ஆனை) இறக்கினான். அல்லாஹ்வின் அடையாளங்களை நிராகரிக்கின்றவர்களுக்கு, நிச்சயமாகக் கடினமான தண்டனை (விதிக்கப்பட்டு) உள்ளது. மேலும் அல்லாஹ் வல்லோனும், தண்டனை வழங்குபவனுமாவான்.
(ஆலி இம்ரான்:05)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## எந்த நபர் வேண்டும் என்றே சோம்பலுடன் செயல்படுகின்றாரோ மேலும் ஜமாஅத்தான தொழுகையில் இணைவதில் காலதாமதம் செய்கின்றாரோ அவருடைய தொழுகை பயனற்றதாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### இமாமிற்குப் பின்னால் சூரா ஃபாத்திஹா

எந்த நபர் ஜமாஅத்தான தொழுகையின்போது ருகூவில் வந்து இணைவாரோ அவருடைய அந்த ரக்அத் கூடுமா? இல்லையா? என்ற விஷயத்தை பற்றிய பேச்சு வந்தது. ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் மற்ற மவ்லவிமார்களின் கருத்துக்களை குறித்து விசாரித்தார்கள். இந்த விவகாரம் தொடர்பாக பல்வேறு இஸ்லாமியப் பிரிவுகளின் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன.

இறுதியில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத்(அலை) அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். மேலும் கூறினார்கள்: لَا صَلٰوۃَ اِلَّا بِفَاتِحَۃِ الۡکِتَابِ என்பதே எமது மார்க்கம் ஆகும். மனிதன் தொழுகையில் இமாமிற்கு பின்னால் நின்றாலோ அல்லது தனியாக நின்றாலோ எல்லா நிலையிலும் அவர் சூரா ஃபாத்திஹாவை ஓத வேண்டும். ஆனால், இமாம் வேகவேகமாக சூரா ஃபாத்திஹாவை ஓதக்கூடாது; மாறாக, நிறுத்தி நிதானமாக சூரா ஃபாத்திஹாவை ஓத வேண்டும். அப்போதுதான் பின்னால் நிற்பவர்கள் அதனை செவியேற்கவும் முடியும்; மேலும் சுயமே அதனை ஓதவும் முடியும். மேலும், ஒவ்வொரு ஆயத்திற்குப் பிறகும் இமாம் எந்த அளவிற்கு தாமதிக்க வேண்டும் என்றால் பின்னால் நிற்பவரும் அந்த ஆயத்தை ஓதிவிட வேண்டும்.

எவ்வாறிருப்பினும், பின்னால் நிற்பவருக்கு இமாம் இதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். அதாவது அவர் அதனை செவியேற்கவும் வேண்டும்; அவர் சுயமே ஓதவும் வேண்டும். சூரா ஃபாத்திஹாவை ஓதுவது அவசியமாகும். ஏனென்றால், அது உம்முல் கிதாப் (வேதங்களின் தாய்) ஆகும். ஆனால் எந்த நபர் சுயமே தொழுகையில் கலந்து கொள்வதற்காக முயற்சி செய்த பிறகும், இறுதியில் அவர் ருகூவின் நிலையிலேயே வந்து

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் ......

## ஹஸ்ரத் மஸீஹ் இப்னு மர்யம் (அலை) 120 வயது வரை இறைவனின் தூதுச் செய்தியை மக்களுக்கு எட்ட வைத்துக் கொண்டிருந்தார்கள். மேலும் காஷ்மீரில் மரணம் அடைந்தார்கள். ஸ்ரீநகர் கானியார் வீதியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்; இன்றுவரை அன்னாருடைய கபர் அங்கு காணப்படுகிறது

وَجَعَلۡنَا ابۡنَ مَرۡیَمَ وَاُمَّہٗۤ اٰیَۃً
وَّاٰوَیۡنٰہُمَاۤ اِلٰی رَبۡوَۃٍ ذَاتِ قَرَارٍ وَّمَعِیۡنٍ
(23:51)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ் தனது அருளால் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களை சிலுவை மரணத்திலிருந்து பாதுகாத்துவிட்டிருந்தான். எனவே அப்போது அன்னார் வேறொரு நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்து செல்வது அவசியமானதாக இருந்தது. ஏனெனில் சிரியா நாடு ரோமானிய பேரரசின் கீழ் இருந்தது. மேலும், அவர் பேரரசின் கிளர்ச்சியாளராக கருதப்பட்டிருந்தார். அந்த நாட்டில் வசித்திருந்தால் பின்னர் அன்னார் கைது செய்யப்பட்டிருப்பார்கள். எனவே அல்லாஹ் அவர்களுக்கு ஹிஜ்ரத்திற்கான கட்டளை வழங்கியிருந்தான். பின்னர் தனது அருளாலும், கருணையாலும் அன்னாருக்கு எப்படிப்பட்ட ஓர் உயர்ந்த இடத்தில் அடைக்கலம் வழங்கினான் என்றால், அந்த இடம் அன்னாருடைய எதிரிகள் அன்னாரை சென்றடைவதில் இருந்து பாதுகாப்பானதாக இருந்தது. மேலும், அங்கு இனிமையான நீரூற்றுகள் ஓடிக்கொண்டிருந்தன; வரலாற்று சான்றுகளிலிருந்து நிரூபணம் ஆகுவதைப் போன்று அந்த இடம் காஷ்மீர் உடைய பகுதியாகும். உயர்தரமான நீரூற்றுகள், பசுமை நிறைந்த இடங்கள் மற்றும் மிகச் சிறந்த சுற்றுச் சூழல் ஆகியவற்றின் காரணமாக மக்கள் அதனை சொர்க்கத்திற்கு நிகராக கருதியிருந்தனர். இன்னும் கூறப்போனால் காஷ்மீர் என்ற சொல் ஹஸ்ரத் மஸீஹ் (அலை)

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் .....

## நபிமொழி

### உளூ செய்தலின் பயன்களும் பரக்கத்துகளும்

ஹஸ்ரத் அபூ தர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

முஸ்லிம் மற்றும் நம்பிக்கையாளரான அடியார் உளூ செய்யும்போதும், முகத்தை கழுவும்போதும், கூறினார்கள்: தண்ணீர் அல்லது தண்ணீரின் கடைசித் துளியுடன் அவரது கண்கள் செய்த அவருடைய அனைத்து தீமைகளும் கழுவப்படுகின்றன.

பின்னர் அவர் தனது இரண்டு கைகளையும் கழுவும்போது, கூறினார்கள்: தண்ணீர் அல்லது தண்ணீரின் கடைசித் துளியுடன் அவரது இரண்டு கைகளும் செய்த அனைத்து தவறுகளும் கழுவப்படுகின்றன. எந்த அளவிற்கு என்றால், அவர் பாவத்திலிருந்து தூயவராக வெளிப்படுகின்றார்.

பின்னர் அவர் தனது பாதங்களை கழுவுகின்றபோது, அவரது பாதங்கள் செய்த அந்த அனைத்து பாவங்களும் கழுவப்பட்டுவிடுகின்றன. எந்த அளவிற்கு என்றால், அவர் அனைத்து பாவங்களிலிருந்தும் தூயவராக வெளிப்படுகின்றார்.

(ஸஹீஹ் முஸ்லிம், மலிக் ஸைஃபுர் ரஹ்மான் அவர்களின் நூல்- ஹதீக்கத்துஸ் ஸாலிஹீன், ஹதீஸ் எண்: 199)

* * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹுனைன் போரில் நிலவிய சூழல்கள் மற்றும் சம்பவங்களின் பின்னணியில்**
**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து**
**ஈமானை வலுவூட்டும் குறிப்புகள்**

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுனைன் போர் சந்தர்ப்பத்தில் மதீனத்து அன்ஸாரிகளிடம் கூறினார்கள்; மக்கள் ஆடுகளையும், ஒட்டகங்களையும் தமது வீடுகளுக்கு அழைத்துச் செல்லும்போது, நீங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை உங்களுடைய வீடுகளுக்கு அழைத்து செல்வதை விரும்பவில்லையா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! எந்த நற்பேறை நீங்கள் கொண்டு செல்கின்றீர்களோ அது அவர்கள் எடுத்துக் கொண்டு செல்வதை விட பல மடங்கு சிறந்ததாகும்!

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளுக்காக துஆ செய்தவாறு கூறினார்கள்:
அல்லாஹ்வே! அன்ஸாரிகளின் மீது கருணை புரிவாயாக! அன்ஸாரிகளின் சந்ததிகள் மீது கருணை புரிவாயாக!
மேலும் அன்ஸாரிகளின் எதிர்கால சந்ததிகள் மீதும் கருணை புரிவாயாக!
அன்ஸாருல்லாஹ்வுடைய இஜ்திமாவும் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
எனவே அன்ஸார்களுக்கும் நான் இதனை கூறுகின்றேன். எவருடைய உள்ளத்திலாவது தனது அனுபவம் மற்றும் தொண்டின் அடிப்படையில் ஏதாவது (தவறான) எண்ணம் உருவாகின்றது என்றால் அதை அவர் புறக்கணித்து விட வேண்டும். மேலும் இறைவனுடைய திருப்தியை பெறுவதற்காக முயற்சி செய்ய வேண்டும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 செப்டம்பர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **தபூக் மாதம் 26 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹுனைன் போரில் இருந்து கிடைத்த போர் செல்வங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டது தொடர்பாக கடந்த குத்பாவில் கூறப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேலும் சில விவரங்களும் உள்ளன. முன்னர் கூறப்பட்டது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர் செல்வங்களை பங்கிட்டு கொடுத்தார்கள்.

மேலும் போரில் பங்கெடுத்தவர்களுக்கு அவர்களுக்குரிய பங்கினையும் வழங்கினார்கள். போர் செல்வங்களில் ஐந்தில் ஒரு பங்கை ஏறக்குறைய அனைத்தையுமே அன்னார் (ஸல்) உள்ளங்களை ஆறுதல் படுத்துவதற்காக குறைஷிய தலைவர்களுக்கு மத்தியிலும், அரேபிய தலைவர்களுக்கு மத்தியிலும் பங்கிட்டார்கள். சிலருக்கு நூறு ஒட்டகங்கள் கொடுத்தார்கள். இன்னும் சிலருக்கு 50 ஒட்டகங்கள் கொடுத்தார்கள். இவ்வளவு அதிகமாக பிறருக்கு செல்வம் கொடுக்கப்பட்டதாக சில அன்சாரி இளைஞர்கள் உணர்ந்தனர்.

மேலும் தங்களுடைய தொண்டுகள் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் **மீது கொண்ட** அன்பு **ஆகியவற்றின்** காரணமாக மற்றவர்களை விட தாங்கள் அதிகம் உரிமை படைத்தவர்கள் என்றும் கருதி வந்தனர். அதன் காரணமாக

يَغْفِرُ اللّٰهُ لِرَسُوْلِ اللّٰهِ يُعْطِيْ قُرَيْشًا
وَيَدَعُنَا وَسُيُوْفُنَا تَقْطُرُ مِنْ دِمَآئِهِمْ

என்று கூறத் தொடங்கிவிட்டனர்.

அதாவது அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை மன்னிப்பானாக! அன்னார் (ஸல்) குறைஷிகளுக்கு கொடுக்கின்றார்கள்: மேலும் எங்களை விட்டு விடுகின்றார்கள். இது அவர்களின் உள்ளத்தில் எழுந்த சிந்தனையாக இருந்தது.

கூறுகின்றார்கள்: எங்களுடைய வாளிலிருந்து அந்த எதிரிகளின் ரத்தம் வடிந்து கொண்டிருக்கின்றது.
(கிதாப் புகாரி, ஃபர்ஸுல் கம்ஸ் ஹதீஸ் எண்: 3147) (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 5, பக்கம் 396, தாருல் குதுபில் இல்மியா, 1993-ம் ஆண்டு) (தாயிரா மஃரூஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொகுதி 9, பக்கம் 290, லாஹூர்)

அதேபோன்று அவர்களில் யாரோ ஒருவர், சூழ்நிலைகள் மிகவும் மோசமானதாகவும் கடினமானதாகவும் இருக்கும்போது நாங்கள் அழைக்கப்படுகிறோம்; போர் செல்வமோ எங்களை தவிர்த்து வேறு மக்களுக்கு வழங்கப்படுகின்றது என்றும் கூறினார்.
(ஸஹீஹ் இப்னு ஹப்பான், கிதாபுஸ் ஸீர், ஹதீஸ் எண்: 4769, தாருல் மஃரூஃப், பெய்ரூத், 2004-ம் ஆண்டு)

இந்த விஷயங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரியவந்த போது, அன்னார் (ஸல்) அன்ஸாரிகளின் தலைவர் ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா (ரலி) அவர்களை அழைத்தார்கள். இந்த அனைத்து விஷயங்களையும் கூறக்கூடியவரும் ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்களே ஆவார்கள் என்பது சிலரின் கருத்தாக இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரிடம்

فَأَيْنَ أَنْتَ مِنْ ذٰلِكَ يَا سَعْدُ

என்று கேட்டார்கள்.

பொருள்:

ஸஅதே! இது தொடர்பாக உம்முடைய கருத்து என்ன? அதற்கு அன்னார் (ரலி) கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நானும் என்னுடைய சமுதாயத்தில் ஒரு நபரே ஆவேன்; என்னையும் இந்தக் கூற்றானது தாக்கத்திற்குள்ளாக்க இயலும். எனவே அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: அனைத்து அன்ஸார்களையும் ஒன்று கூட்டுங்கள். அனைவரும் ஒரு கூடாரத்தில் ஒன்று கூடினார்கள். சில முஹாஜிர்களும் அதில் வந்திருந்தனர். நான் அன்ஸார்களை மட்டுமே அழைத்தேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் முஹாஜிர்களை அங்கிருந்து திருப்பி அனுப்பி வைத்து விட்டார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளை பார்த்து இவ்வாறு கூறினார்கள்:

அன்ஸார் கூட்டத்தினரே! உங்களின் புறமிருந்து என்னை வந்தடைந்துள்ள அந்த செய்தி என்ன ? என்று எனக்கு கூறுங்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த கூற்றைக் கேட்டு அன்ஸாரிகளின் கருத்து கூறுபவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களில் புரியும் திறன் கொண்ட மக்களில் எவரும் இதனை கூறவில்லை. சில

உணர்ச்சிவசப்பட்ட இளைஞர்கள் தான் அவ்வாறு கூறினர். அதாவது அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை மன்னிப்பானாக!; மேலும் அன்னார் குறைஷிகளுக்கு வழங்குகின்றார்கள்; அதே நேரம் அன்னாரின் கொடையிலிருந்து நாங்கள் இழப்பிற்குரியவர்களாக இருக்கின்றோம்; ஆனால் எங்களுடைய வாளிலிருந்து அந்த எதிரிகளின் ரத்தம் வடிந்து கொண்டிருக்கின்றது! எனக் கூறியதாக கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளின் மீதுள்ள பேருபகாரம் மற்றும் அருள்களை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:

அன்ஸாரிகளே! நான் உங்களை சந்தித்தபோது, உங்களை நான் வழிகேட்டில் கண்டேன்; பிறகு அல்லாஹ் என் மூலமாக உங்களுக்கு நேர்வழியை வழங்கினான். நீங்களோ பிரிந்து சிதறுண்டு கிடந்த சமுதாயமாக இருந்தீர்கள். நீங்களோ ஒருவர் மற்றவரின் எதிரிகளாக இருந்தீர்கள். அல்லாஹ் என் மூலமாக உங்களுடைய பரஸ்பர அன்பு மற்றும் நேசத்தை உருவாக்கினான்.

நீங்கள் இயலாதவர்களாகவும் ,தேவை உடையவர்களாகவும் இருந்தீர்கள். அல்லாஹ் என் மூலமாக உங்களை தன் நிறைவு பெற்றவர்களாகவும், செல்வந்தர்களாகவும் ஆக்கினான்; ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் கூறிய அனைத்து விஷயங்களுக்கும் அன்ஸார்கள்

اَللّٰهُ وَرَسُوْلُهٗ اَمَنُّ

என்று கூறினர்:

பொருள்: ஆம்! இவையனைத்தும் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் பேருபகாரமாகும்.

(பெருமானார் ஸல்) அவர்கள் அன்ஸாரிகளிடமிருந்து இந்த பதிலைக் கேட்டதும், நீங்கள் ஏன் எனக்கு பதில் அளிப்பதில்லை? என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அதற்கு,அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் என்ன பதில் கூறுவது? என்று அவர்கள் கூறினர். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் விரும்பினால் இவ்வாறு நீங்கள் எனக்கு பதில் அளிக்கலாம். மேலும் அது நீங்கள் கூறுவது உண்மையாகவும் இருக்கும். மேலும் உங்களுடைய கூற்று உண்மைப்படுத்தப்படும். நீங்கள் இவ்வாறு கூற முடியும். அதாவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எங்களிடம் எப்படிப்பட்ட நிலையில் வந்தீர்கள் என்றால், நீங்கள் அப்போது பொய்ப்படுத்தப்பட்டிருந்தீர்கள்; ஆனால் நாங்கள் தங்களை உண்மைப்படுத்தினோம்; தங்களுக்கு அப்போது எவ்வித உதவியாளர்களும் இருக்கவில்லை; மக்கள் தங்களை புறக்கணித்தார்கள்; ஆனால் நாங்கள் தங்களுக்கு உதவி செய்தோம்; அவர்கள் தங்களை தங்களுடைய நகரத்திலிருந்து வெளியேற்றினார்கள்; ஆனால் நாங்களோ தங்களுக்கு எங்களுடைய நகரத்தில் அடைக்கலம் வழங்கினோம்; மேலும் தாங்கள் அதிக குடும்பத்தினரையுடையவராக இருந்தீர்கள்; மேலும் நாங்கள் தங்களுடைய துக்கத்தை நீக்கினோம்.

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் இந்த கூற்றைக் கேட்டு எந்த அன்ஸாரும் எதுவும் கூறவில்லை. அனைவரும் தலையை குனிந்தவாறு அன்னாருடைய பேச்சை கேட்டுக் கொண்டிருந்தார்கள். மேலும் வெட்கித் தலை குனிந்து இருந்தார்கள். மேலும், தாம் ஏன் குறைஷியர்களுடன் இவ்வாறு நடந்து கொண்டார்கள் ? என்பதை அன்ஸாரிகளிடம் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நீங்கள் ஆரம்பம் முதலே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டீர்கள்; இஸ்லாம் மற்றும் ஈமான் உங்கள் உள்ளங்களில் நன்கு ஆழமாக வேரூன்றி விட்டிருந்தது. ஆனால், குறைஷியர்களில் பெரும்பாலான மக்கள் மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தில் புதிதாக முஸ்லிம்களாகியிருந்தார்கள்; இன்னும் கூறுவதாயின், அவர்களில் பலர் இவ்வாறு இருந்தார்கள். அதாவது இன்று வரை அவர்களுக்கு இஸ்லாத்துடன் எந்தவொரு தொடர்பும் ஏற்படவில்லை; முன்னர் ஈமான் கொண்டவர்களுடன் ஒப்பிடுகையில் இந்த புதிய முஸ்லிம்கள் உறவு பாராட்டப்படுவதற்கும், அன்பளிப்புகளுக்கும் அதிக உரிமை படைத்தவர்களாக இருந்தனர்; அதன் மூலமாக இஸ்லாம் அவர்களின் உள்ளங்களில் குடிகொள்ள வேண்டும் என்பது நோக்கமாக இருந்தது. மேலும் அதிக போர்களின் காரணமாக குறைஷியர்களின் பெரும்பாலானவை வீணாகி விட்டதால் அவர்கள் இந்த இந்த அன்பளிப்புகளுக்கு உரிமை படைத்தவர்களாகவும் இருந்தார்கள். எனவே எனது நோக்கம் என்னவாக இருந்தது என்றால் அவர்களின் உள்ளங்களுக்கு ஆறுதல் வழங்கப்பட வேண்டும்; மேலும் இவர்கள் முழுமையான முறையில் இஸ்லாம் மற்றும் ஈமானிய வட்டத்திற்குள் வந்து விட வேண்டும் என்பதாகும். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்; மக்கள் ஆடுகளையும், ஒட்டகங்களையும் தமது வீடுகளுக்கு அழைத்துச் செல்லும்போது, நீங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை உங்களுடைய வீடுகளுக்கு அழைத்து செல்வதை விரும்பவில்லையா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! எந்த நற்பேறை நீங்கள் கொண்டு செல்கின்றீர்களோ அது அவர்கள் எடுத்துக் கொண்டு செல்வதை விட பல மடங்கு சிறந்ததாகும்!

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்;

மக்கள் ஒரு பள்ளத்தாக்கிலும், அதே நேரம் அன்ஸார்கள் வேறொரு பள்ளத்தாக்கிலும் நடந்து செல்கின்றார்கள் என்றால் நான் (அன்ஸார்களாகிய) அவர்களுடன் நடப்பதையே விரும்புவேன். அதாவது நான் அன்ஸார்களின் கூட்டத்தில் இணைவேன்; மக்கள் என்னுடைய புற ஆடைகள் ஆவார்கள் ஆனால் அன்ஸார்கள் உள்ளாடைகள் ஆவர்; அதாவது அன்ஸார்கள் என்பவர்கள் உடலோடு ஒட்டியிருக்கின்ற ஆடைகளை போன்றவர்கள் ஆவர்.

அடுத்து, பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அன்ஸாரிகளே!

எனக்குப் பிறகு உங்களை விட மற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை நீங்கள் காண்பீர்கள்; ஆனால் நீங்கள் பொறுமையை மேற்கொள்ளுங்கள்; எதுவரை என்றால்,கவ்ஸர் தடாகத்தில் உங்களுக்கும், எனக்குமிடையில் சந்திப்பு நிகழும். அதாவது மறுமை நாளில் சந்திப்பு நிகழும். மேலும் உங்களுக்கு தலைமைத்துவம் கிடைக்காது. இறுதியில், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளுக்காக துஆ செய்தவாறு கூறினார்கள்:

அல்லாஹ்வே! அன்ஸாரிகளின் மீது கருணை புரிவாயாக! அன்ஸாரிகளின் சந்ததிகள் மீது கருணை புரிவாயாக! மேலும் அன்ஸாரிகளின் எதிர்கால சந்ததிகள் மீதும் கருணை புரிவாயாக!

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தபோது, அன்ஸார்கள் அழுது கொண்டிருந்தனர். எதுவரை என்றால், அவர்களின் தாடிகள் கண்ணீரால் நனைந்து இருந்தன. மேலும் அவர்கள்.

رَضِيْنَا بِرَسُوْلِ اللّٰهِ قِسْمًا وَحَظًّا

என்றே கூறிக் கொண்டிருந்தனர்.

பொருள்: நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பங்கீடு மற்றும் எங்களுக்கு கிடைத்த பங்கில் உள்ளத்தாலும், உயிராலும் திருப்தியடைந்திருக்கின்றோம்.

(ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் ஃபர்ஸுல் கம்ஸ், ஹதீஸ் எண்: 3147)

சில நேரங்களில் கவனம் இல்லாமல் கூறப்படுகின்ற விஷயம், பாரதூர விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக அமைகின்றது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பங்கு வைத்து கொடுத்ததில், அன்ஸாரிகளின் இளைஞர்கள் விருப்பமின்மையை வெளிப்படுத்தி இருந்தார்கள். ஆனால் அனைவரும் அவ்வாறு செய்திருக்கவில்லை. ஆனால் இறைவன் மற்றும் அவனுடைய தூதரை இது எந்த அளவிற்கு கோபமூட்டக்கூடிய செயலாக இருந்தது என்றால், அன்ஸார்களுக்கு உலகம் இருக்கும் நாள் வரை இதன் பாதிப்பை சந்திக்க நேரிட்டது.

இதை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றிக் கொண்ட போது மக்காவை சார்ந்த மக்கள் அன்னாரிடத்தில்

வந்தனர். ஈமானால் முழுமையான முறையில் பொலிவடையாத காரணத்தால் அவர்களின் பார்வை இன்னும் உலகத்தின் பக்கமே இருந்தது. இதன் பிறகு நடந்த ஒரு போரில் சில செல்வங்கள் முஸ்லிம்களின் கைகளுக்கு வந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த செல்வங்களை அந்த மக்களுக்கு மத்தியில் பங்கிட்டு கொடுத்துவிட்டார்கள். எங்களது வாளிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருக்கின்றது. மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செல்வங்களை தமது உறவினர்களுக்கு கொடுத்து விட்டார்கள் என்று ஓர் அன்ஸாரி இளைஞர் ஒரு சபையில் கூறினார். அன்னாருக்கு இது பற்றி தெரிய வந்ததும், மூத்த அன்ஸாரிகளை அழைத்தார்கள். மேலும் எனக்கு இப்படிப்பட்ட விஷயம் வந்தடைந்துள்ளததே? என்று விசாரித்தார்கள். அன்ஸார்கள் அழத் தொடங்கினர்; மேலும் யாரோ அறிவற்றவன் பேசியிருக்கின்றான் என்று கூறினர்.

அப்போது அன்னாா (ஸல் கூறினார்கள்; அப்படியல்ல! அன்ஸார் கூட்டத்தினரே! நீங்கள் வேண்டுமானால் இவ்வாறு கூற முடியும்:

அதாவது முஹம்மது ((ஸல்) அவர்களு)க்கு யாருமே இடம் கொடுக்காத அந்த நேரத்தில் நாம் அவருக்கு இடம் (அதாவது அடைக்கலம்) கொடுத்தோம். மேலும் அவரது நகரவாசிகள் அவரை வெளியேற்றி விட்டனர்; பின்னர் அவருக்காக கண்ணியம் மற்றும் வெற்றியை பெற்றோம். அப்போது அவர் செல்வங்களை தமது உறவினர்களுக்கு பங்கிட்டு கொடுத்துவிட்டார். அப்போது அன்ஸார்கள் கதறி அழுதனர். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் அவ்வாறு கூறுவதில்லை! என்று அவர்கள் மீண்டும் கூறினர். அடுத்து, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நீங்கள் இந்த விஷயத்தை வேறொரு விதத்திலும் கூற முடியும். அது இவ்வாறாகும். அதாவது, எந்த நபரை இறைவன் முழு உலகின் நேர்வழிக்காக அனுப்பி இருந்தானோ அவர் மக்காவை சார்ந்தவராக இருந்தார். ஆனால் அவரை இறைவன் மதீனாவிற்கு கொண்டு வந்தான். மேலும், பின்னர் இறைவன் தனது ஆற்றல் மற்றும் வலிமையால் மக்காவை அவருக்காக வெற்றி கொண்டான். அப்போது நமது செல்வம் நமக்கு கிடைத்துவிடும் என்று மக்காவாசிகள் கருதி இருந்தனர். மேலும், மக்காவாசிகளோ ஆடுகளையும், ஒட்டகங்களையும் கொண்டு சென்றனர்; மேலும் மதீனாவாசிகளோ இறைவனின் தூதரை தங்களுடன் அழைத்துக் கொண்டு தங்களது நகரத்தை நோக்கி சென்று விட்டனர்.

பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நிச்சயமாக இந்தக் கூற்றானது ஓர் அறிவீனரின் வாயிலிருந்து வெளிவந்ததாகும். எனினும், இதன் காரணமாக இனி உங்களுக்கு இந்த உலகியல் ஆட்சி கிடைக்க முடியாது; இனி உங்களுக்கு உங்களது தொண்டிற்கான பிரதிபலன் கவ்ஸர் தடாகத்திலேயே கிடைக்கும்.

பாருங்கள்!

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

பாருங்கள்! 13 நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. 14-வது நூற்றாண்டு நடந்து கொண்டிருக்கின்றது. இன்னும் கூறப்போனால், தற்போது அதுவும் கழிந்து விட்டது. இந்தக் காலகட்டத்தில் இஸ்லாத்தின் விளைவாக ஒவ்வொரு சமுதாயமும் அரசரானது. ஆனால் எந்தவொரு அன்ஸாரியும் அரசராக முடியவில்லை. எனவே சில நேரத்தில் ஒரு நபரின் கூற்றானது முழு சமுதாயத்தின் பாதிப்பிற்கும் காரணியாக ஆகிவிடக் கூடும்!

(குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 17 பக்கம் 728 ,குத்பா ஜும்ஆ பேருரை செப்டம்பர் 4 ,1936)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை தனது ஒரு குத்பாவில் எடுத்துரைத்தார்கள். மேலும் அதை எடுத்துரைத்து ஜமாஅத்திற்கு வழங்கிய அந்த அறிவுரை அன்று எப்படி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததோ அதேபோன்று இன்றும் நமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது.

அன்னார்(ரலி) கூறினார்கள்:

எந்த மக்கள் தமக்கு ஏதாவது பதவி கிடைக்க வேண்டும்; அல்லது செல்வம் போன்றவை கிடைக்க வேண்டும் என்பதற்காக தியாகங்கள் செய்கின்றார்களோ, அவர்கள் ஒருபோதும் நான் அழைக்கும்போது - அதாவது காலத்தின் கலீஃபா அழைக்கும்போது, தியாகம் செய்வதற்காக வரவேண்டாம்; மாறாக, எவர்கள் இறைவனுக்காக குர்பானி செய்கின்றார்களோ அவர்களே வரட்டும் ; ஏனெனில் நானோ சுயமே பலவீனமானவனாகவும், நோயுற்ற மனிதனாகவும் இருக்கின்றேன்; எவருடைய உபகாரத்தையும் என்னால் சுமக்க முடியாது;

எனவே நான் எனக்காக எதையும் கேட்கவில்லை; இறைவனுக்காக எவர் கொடுக்கின்றாரோ அவர் கொடுக்கட்டும்; மேலும் இறைவன் அதற்கான பிரதிபலனையும் அவருக்கு கொடுப்பான்; வல்ல இறைவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்; அவன் நாடினால் இந்த உலகில் கொடுத்து விடுவான்; மேலும் அவன் நாடினால் மறுமையில் கொடுப்பான்.

எவ்வாறிருப்பினும், எவர் தூய மனதுடன் தியாகம் செய்வாரோ அவரது தியாகம் ஒருபோதும் வீணாகுவதில்லை. நம்பிக்கையாளரின் தியாகத்தை எவராலும் வீணாக்க முடியாது. எனவே உலகை அல்லாமல் இறைவனை கருத்தில் கொள்கின்ற நபர்களே தியாகம் செய்யக்கூடிய மக்கள் ஆவர்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17 , பக்கம், 7 2 8 - 7 2 9 .குத்பா ஜும்ஆ பேருரை 1936 ஆம் ஆண்டு டிசம்பர் 4)

எனவே எப்போதும் தியாகம் மற்றும் பொறுப்புகளை பொருத்தவரை இறை திருப்தியை கருத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர் இறைவனுடைய அசல் அருட்கொடைகளை பெறக் கூடியவராக இருப்பார். ஒரு (குறிப்பிட்ட) வயதை அடைந்த ஜமாஅத் உறுப்பினர்களிடம் இந்த எண்ணம் உருவாகி விடுகின்றது. அதாவது நமக்கு இவ்வளவு அனுபவம் உள்ளது; நாம் இவ்வளவு பணிகளை செய்துள்ளோம்; நமக்கு இதற்கான பிரதிபலன் கிடைக்க வேண்டும்; ஆனால் அது கொடுக்கப்படுவதில்லை என்ற எண்ணம் உருவாகின்றது. உலகின் பிரதிபலனை மட்டுமே நீங்கள் பெற வேண்டுமா? அல்லது அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாக வேண்டுமா என்று அவர்கள் சிந்திக்கட்டும் !

அன்ஸாருல்லாஹ்வுடைய இஜ்திமாவும் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் இந்த வயதில் அனுபவம் கிடைத்துவிடுகின்ற போது, அதன் அடிப்படையில் இந்த எண்ணம் வந்து தோன்றிவிடுகின்றது.

எனவே அன்ஸார்களுக்கும் நான் இதனை கூறுகின்றேன். எவருடைய உள்ளத்திலாவது தனது அனுபவம் மற்றும் தொண்டின் அடிப்படையில் ஏதாவது (தவறான) எண்ணம் உருவாகின்றது என்றால் அதை அவர் புறக்கணித்து விட வேண்டும். மேலும் இறைவனுடைய திருப்தியை பெறுவதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் காட்டரபிகளின் பொறுமையின்மை பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. போர் செல்வங்களை பங்கிடும் நேரத்தில் சில காட்டரபிகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி ஒன்று கூடியிருந்தனர். மேலும் தங்களுக்கும் செல்வம் கொடுக்குமாறு கேட்டனர். அவர்களின் கூட்ட நெரிசலின் காரணமாக இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய போர்வையும் ஒரு காட்டு முள் செடியில் சிக்கிக்கொண்டது. மேலும் சிறிது தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது எனது போர்வையை எனக்கு திருப்பி கொடுத்துவிடுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அந்த முட்கள் நிறைந்த செடிகளை நோக்கி சைகை செய்தவாறு கூறினார்கள்:

இவற்றின் முற்களுக்கு சமமாக என்னிடத்தில் ஒட்டகங்கள் இருந்திருந்தால் அப்போது அவை அனைத்தையும் நான் உங்களுக்கு பங்கிட்டுக் கொடுத்திருப்பேன்; மேலும், என்னை நீங்கள் கருமியாகவும், பொய்யுரைப்பவனாகவும், கோழையாகவும் காண மாட்டீர்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், காட்டரபிகளின் இந்த ஒழுங்கீனத்திற்காக அவர்களை எவ்வகையிலும் கடிந்து கொள்ளவுமில்லை;

கோபப்படவும் இல்லை; மாறாக, சிரித்தபடி அழகிய முறையில் அவர்களுக்கு தர்பிய்யத் வழங்கினார்கள். மேலும் அவர்களுக்கு செல்வமும் கொடுத்தார்கள்.

(தாயிரா மஆரூஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) தொகுதி9, பக்கம் 299, லாகூர்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதை குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

இந்தப் போர்களை முடித்துவிட்டு வெளியேறிய பிறகு, தோல்வியடைந்த எதிரிகளின் அபராதத் தொகை மற்றும் போர் மைதானத்தில் அவர்கள் விட்டுச் சென்ற பொருட்கள் ஆகியவற்றின் மூலம் ஒன்று திரட்டப்பட்ட அந்த செல்வங்களை வழமையான முறைப்படி இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய போர்ப் படையில் பங்கிட்டு கொடுக்க இருந்தார்கள். ஆனால், அந்த சந்தர்ப்பத்தில் அன்னார் (ஸல்) அந்த செல்வங்களை முஸ்லிம்களுக்கு மத்தியில் விநியோகம் செய்வதற்கு பகரமாக மக்கா மற்றும் அதன் சுற்று வட்டாரத்து மக்களுக்கு மத்தியில் பங்கிட்டுக் கொடுத்தார்கள்.

அந்த மக்களின் உள்ளங்களில் ஈமான் உருவாகியிருக்கவில்லை. ஏராளமானவர்கள் இன்னும் நிராகரிப்பாளர்களாகவே இருந்தனர். மேலும் எவர்கள் முஸ்லிம்களாக இருந்தார்களோ அவர்களும் முற்றிலும் புதிய முஸ்லிம்களாகவே இருந்தனர். ஒரு சமுதாயம் தனது செல்வத்தை மற்ற மக்களுக்கு மத்தியில் பங்கிட்டு கொண்டிருந்தது முற்றிலும் அவர்களுக்கு புதிய விஷயமாக இருந்தது. இந்த செல்வத்தின் பங்கீட்டால் அவர்களின் உள்ளத்தில் நன்மை மற்றும் இறையச்சம் உருவாகுவதற்கு பகரமாக பேராசை மேலும் அதிகரித்துவிட்டது. அவர்களின் சில மக்களிடம் இந்த நிலை உருவானது. அதாவது, அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களை சுற்றி கூட்டத்தை திரட்டி விட்டனர். மேலும் கூடுதலான கோரிக்கைகளை வைத்து அன்னாருக்கு நெருக்கடி கொடுக்க தொடங்கிவிட்டனர். எந்த அளவிற்கு என்றால் அன்னாரை தள்ளித் தள்ளி ஒரு மரம் வரை கொண்டு சென்று விட்டனர். அன்னார் (ஸல்) தமது தோளின் மீது வைத்திருந்த அன்னாரது போர்வையை பிடித்துக் கொண்டு ஒருவன் எந்த அளவிற்கு அதனை முறுக்கத் தொடங்கினான் என்றால் அன்னாருக்கு மூச்சு திணற தொடங்கியது.

அன்னார்(ஸல்) கூறினார்கள்:

மக்களே! என்னிடத்தில் இன்னும் செல்வம் இருந்திருந்தால் நான் அதனையும் உங்களுக்கு கொடுத்திருப்பேன்; நீங்கள் என்னை ஒருபோதும் கருமியாகவோ அல்லது கோழையாகவோ காண மாட்டீர்கள். பின்னர் அன்னார் (ஸல்) தமது பெண் ஒட்டகத்தின் பக்கம் சென்றார்கள். மேலும் அதனுடைய ஒரு முடியை எடுத்தார்கள். மேலும் அதனை உயர்த்தினார்கள். மேலும் கூறினார்கள்; மக்களே! எனக்கு உங்களின் செல்வங்களில் இந்த முடிக்கு சமமான அளவு கூட தேவையில்லை; அரபு நாட்டின் சட்டத்திற்கு ஏற்ப அரசாங்கத்தின் பங்காக அமைகின்ற அந்த ஐந்தில் ஒரு பங்கு செல்வத்தை தவிர வேறு எதுவும் எனக்குத் தேவையில்லை. மேலும் அந்த ஐந்தில் ஒரு பங்கையும் கூட நான் எனக்காக செலவு செய்வதில்லை; மாறாக அதனையும் உங்களுடைய மக்களின் பணிகளுக்காகவே செலவு செய்யப்படுகின்றது. மேலும் நினைவிற் கொள்ளுங்கள் ! நம்பிக்கை துரோகம் செய்யக்கூடிய மனிதன் மறுமை நாளன்று இறைவனின் சமூகத்தில் இந்த நம்பிக்கை துரோகத்தின் காரணமாக இழிவடைவான்.

முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அரசாட்சிக்கு ஆசைப்படக் கூடியவர்களாக இருந்தார்கள் என்று எதிரிகள் கூறுகின்றனர். அரசர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையிலான தொடர்பு இப்படித்தான் இருக்குமா? ஓர் அரசரை இவ்வாறு தள்ளிக் கொண்டு செல்வதற்கும், மேலும் அவரது கழுத்தில் துணியைப் போட்டு இறுக்கி அவரது கழுத்தை நெறிப்பதற்கும் எவருக்காவது வலிமை உள்ளதா? அல்லாஹ்வின் தூதரை தவிர்த்து வேறு எவர்தான் இப்படிப்பட்ட முன்மாதிரியை காட்ட முடியும்? ஆனால் இவ்வாறு அனைத்து செல்வங்களையும் ஏழைகளுக்கு பங்கிட்டு கொடுத்தப் பிறகும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பங்கீட்டை நீதமான பங்கீடாக கருதாத கல் நெஞ்சக்காரர்களும் இருந்தனர்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 357 -358)

போரில் கிடைத்த செல்வங்களை பிரித்துக் கொடுப்பது தொடர்பாக பொதுவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறை இவ்வாறாக இருந்தது : அதாவது போர் செல்வங்களில் கம்ஸ் எனும் ஐந்தில் ஒரு பங்கை தனியாக பிரித்து வைத்து விடுவார்கள். அதனை ஹுஸூர் (ஸல்) அவர்கள் தமது தீர்மானத்தின் படி பங்கிட்டு கொடுத்து வந்தார்கள் ;அல்லது செலவிட்டு வந்தார்கள். மேலும் மற்ற அனைத்து செல்வங்களையும் போரில் பங்கெடுத்தவர்களுக்கு மத்தியில் பங்கிட்டு கொடுத்து வந்தார்கள். அதில், போருக்கு நடந்து சென்றவர்கள் மற்றும் குதிரை சவாரிகள் என தனித்தனியாக அவர்களுக்கான பங்கு இருந்தது. ஆனால், எங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதுவும் கொடுக்கவில்லை; மேலும் மற்றவர்களுக்கு கொடுத்துவிட்டார்கள் என்று ஹுனைன் போர் செல்வங்களின் பங்கீடு தொடர்பாக சில அன்ஸார்கள் புறமிருந்து இந்த கேள்வி அல்லது ஆட்சேபனை செய்யப்பட்டபோது இந்த கேள்வி எழுகின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரில் பங்கெடுத்தவர்களுக்கு போர் செல்வங்களில் இருந்து எதுவுமே கொடுக்கவில்லையா? அல்லது அவர்களுக்கான பங்கை மட்டும் கொடுத்திருந்தார்களா? மேலும் எஞ்சிய செல்வங்களை மற்றவர்களுக்கு கொடுத்துவிட்டார்களா? என்ற கேள்வி எழுகின்றது.

எவ்வாறு இருப்பினும், நமது ஆராய்ச்சிக் குழுவினர் உள்ளனர். அவர்கள் கூறுகின்றார்கள்:

நாங்கள் வாழ்க்கை வரலாற்றின் துவக்க கால மற்றும் நம்பத்தகுந்த நூல்களை பார்த்தோம்; எதிலும் இதற்கான விளக்கமான பதில் வழங்கப்படவில்லை. ஆனால் இவர்களின் கருத்தின்படி, வரலாற்று நூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்றின் நூல்களை படிப்பதன் மூலம் இந்த விஷயம் தெரிய வருகிறது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரில் பங்கெடுத்த அனைவருக்கும் அவர்களுக்குரிய பங்கை கொடுத்திருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் நான்கு ஒட்டகங்கள் அல்லது 40 ஆடுகள் என்ற வடிவில் வழங்கப்பட்டிருந்தன. மேலும் குதிரை சவாரிகளுக்கு அவர்களுக்குரிய பங்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த விஷயமும் சைகையாக கிடைக்கின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஐந்தில் ஒரு பங்கிலிருந்து உள்ளங்களை ஆறுதல் படுத்துவதற்காக மக்களுக்கு செல்வங்களை வழங்கி வந்தார்கள். ஆனால் இந்த விஷயத்திற்கும் சாத்தியம் உள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் போர் செல்வங்களில் இருந்து எவருக்கும் எதுவும் கொடுக்கவில்லை. அதாவது பொதுவான சட்டத்திற்கு ஏற்ப இந்த செல்வங்கள் போரில் பங்கெடுத்தவர்களுக்கு மத்தியில் பங்கிட்டுக் கொடுக்கப்படாமல் இருந்திருக்கலாம்; மேலும் அனைத்து செல்வங்களும் மற்ற மக்களுக்கு உள்ளங்களை ஆறுதல்படுத்துவதற்காக பங்கீடு செய்து கொடுத்து இருக்கலாம். வரலாற்று நூல் மற்றும் வாழ்க்கை வரலாற்றின் பல்வேறு நூல்களில் இருந்து இந்தக் கருத்து உண்மைப்படுத்தப்படுகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் ஒரு மேற்கோளில் இருந்தும் தற்போது எடுத்துரைக்கப்பட்டது போன்ற ஒரு கருத்தும் கிடைக்கின்றது. அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அந்தப் போரிலிருந்து திரும்பிய பிறகு அந்த தோல்வியுற்ற எதிரிகளின் அபராதங்கள் மற்றும் எதிரிகள் போர் மைதானத்தில் விட்டுச் சென்ற பொருட்கள் ஆகியவை ஒன்று சேர்க்கப்பட்டன. அதாவது கூறப்பட்டது போன்று பொதுவான நடைமுறைக்கு ஏற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவற்றை இஸ்லாமிய படைகளுக்கு மத்தியில் பங்கிட்டு கொடுக்க வேண்டியது இருந்தது. ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் அந்த செல்வத்தை முஸ்லிம்களுக்கு மத்தியில் பங்கிடுவதற்கு பகரமாக மக்கா மற்றும் அதன்

சுற்றுவட்டாரத்தில் இருந்த மக்களுக்கு மத்தியில் பங்கிட்டுக் கொடுத்தார்கள்.

ஹதீஸ்களில் அறிவிப்புகள் கிடைக்கின்றன. அதாவது போர் செல்வங்கள் பங்கிட்டு கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, ஒரு காட்டரபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையில் வந்து, முஹம்மதே! (ஸல்) என்னிடத்தில் நீங்கள் என்ன வாக்குறுதி கொடுத்திருந்தீர்களோ அதனை நிறைவேற்றுங்கள்! என்று கூறினான். அப்போது, நீ மகிழ்ச்சி அடைவாயாக! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு, மகிழ்ச்சியடைவாயாக! என்று தாங்கள் பலமுறை இதையே கூறியுள்ளீர்கள்! என்று அந்த காட்டரபி கூறினான்.

அதாவது தாங்கள் எதுவுமே கொடுப்பதில்லை; இதை மட்டுமே கூறுகின்றீர்கள்! என்று கூறினான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவனுடைய இந்த நடவடிக்கை பிடிக்கவில்லை. அன்னார் (ஸல்) அவனிடமிருந்து தமது அருளுக்குரிய முகத்தை திருப்பிக் கொண்டார்கள். மேலும் அங்கு ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் பிலால் (ரலி) ஆகியோர் நின்று கொண்டிருந்தனர். அவர்களை நோக்கி தமது முகத்தை திருப்பியவாறு இவ்வாறு கூறினார்கள்:

இவரோ நற்செய்தியை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்; தற்போது நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். அந்த இருவரும் இதனை செவியுற்றதும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் ஏற்றுக்கொண்டோம் என்று கூறினர். அதன் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தண்ணீர் குவளையை கொண்டு வரச் செய்து, அதில் தமது கரம் மற்றும் முகத்தை கழுவினார்கள். பின்னர் அன்னார் (ஸல்) அந்த தண்ணீரை ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்ரி (ரலி) மற்றும் ஹஸ்ரத் பிலால் (ரலி) ஆகியோரிடம் கொடுத்தவாறு, நீங்கள் இருவரும் இந்த தண்ணீரை பருகுங்கள் ; மேலும் உங்களது முகத்திலும், நெஞ்சத்திலும் இதனை தடவிக் கொள்ளுங்கள்; மேலும் மகிழ்ச்சி அடையுங்கள் என்று கூறினார்கள்.

அவர்கள் அந்த குவளையை வாங்கி அவ்வாறு செய்தனர். இங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய துணைவியார்களின் களங்கமற்றத் தன்மையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அருளை பெற்றது தொடர்பான விளக்கத்தைக் கொண்ட ஒரு வினோதமான மற்றும் பொறாமை கொள்ளும் காட்சியும் தென்பட்டது. இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அருகில் இருந்த கூடாரத்தில் ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் உம்மு ஸலமா (ரலி) அவர்களும் இருந்தார்கள். இந்த அனைத்து சம்பவங்களும் ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்களின் கூடாரத்திற்கு அருகிலேயே நிகழ்ந்தது என தெரிகிறது. அன்னார் (ரலி) திரைக்குப் பின்னால் இருந்து கொண்டு அந்த இரு ஸஹாபிகளிடமும் அதாவது ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் பிலால் (ரலி) ஆகியோரிடம் உங்களது தாய்க்கும் அந்த தண்ணீரை கொஞ்சம் மிச்சம் வையுங்கள் என்று கூறினார்கள். எனவே அவர்கள் சிறிது தண்ணீரை மிச்சம் வைத்தார்கள். அறிவிப்பில் வருகிறது :

ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அவர் ஆடுகளுடைய ஒரு பெரிய மந்தையை இரு மலைகளுக்கு இடையே உள்ள ஒரு பள்ளத்தாக்கில் இருப்பதைக் கண்டார். ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களிடம் இதை எனக்கு தாருங்கள்! என்று அவர் கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி அதை அவருக்கு கொடுத்துவிட்டார்கள். அவர் அந்த மந்தையை அழைத்துக் கொண்டு தனது சமுதாயத்தினரிடம் சென்றார். மேலும் கூறினார்: மக்களே! முஹம்மது (ஸல்) அவர்களின் மீது நம்பிக்கைக் கொள்ளுங்கள் ; அவர் எந்த அளவிற்கு வாரி வழங்குகின்றார் என்றால் அவருக்கு பசி, பட்டினியை பற்றிய எவ்வித கவலையும் இருப்பதில்லை. வரலாற்று ஆசிரியர்கள் இந்த சந்தர்ப்பத்திலேயே இந்த சம்பவமும் நிகழ்ந்ததாக எழுதியுள்ளார்கள். இது ஹதீஸ் உடைய அறிவிப்பாகும்.

எவ்வாறு இருப்பினும், இன்னும் சம்பவங்கள் உள்ளன. இன்ஷா அல்லாஹ் !எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும். தற்போது நான் சில மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்புகளை எடுத்துரைக்க விரும்புகின்றேன். ஜும்ஆவிற்கு பிறகு ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். முதலாவது நற்குறிப்பு, ருமேனியாவின் முபல்லிஃக் ஆக மதிப்பிற்குரிய ஃபஹீமுத்தீன் நாஸிர் ஸாஹிப் அவர்கள் இருந்தார்கள். அன்னார் கடந்த நாட்களில் தமது 52-வயதில் மரணமடைந்து விட்டார்கள். انا لله وانا اليه راجعون

அல்லாஹ்வின் அருளால் மர்ஹூம் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அன்னாருடைய கொள்ளுப் பாட்டனார் ஹஸ்ரத் மிர்ஸா இல்ம்தீன் ஸாஹிப் மூலமாக வந்தது. அன்னார் (ரலி) கடிதம் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்யும் நற்பேறு பெற்றிருந்தார்கள். காதியானிற்கு அருகில் இருக்கக்கூடிய நோதி நங்கல் என்ற கிராமத்தின் பள்ளிவாசல் இமாம் நூர் முஹம்மது ஸாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்துவிட்டு வந்திருந்தார்கள். அவர் திரும்ப கிராமத்திற்கு வந்து, இமாம் மஹ்தி தோன்றி விட்டார்; அவர் உண்மையாளர் ஆவார்; அவரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவிப்பு செய்தார்கள். பின்னர் கடிதம் மூலமாக பைஅத் செய்தவர்களில் ஹஸ்ரத் மிர்ஸா இல்ம் தீன் ஸாஹிப் (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள். ஃபஹீமுத்தீன் நாஸர் ஸாஹிப் 1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஜாமிஆ தேர்ச்சிப் பெற்றார்கள்.பிறகு பாகிஸ்தானின் பல்வேறு இடங்களில் பணியமர்த்தப்பட்டார்கள். பிறகு தஃப்ஸீரூல் குர்ஆன் என்ற துறையில் சிறப்புக் கல்வி பயின்றார்கள். 2006 இல் அன்னார் ருமேனியாவிற்கு அனுப்பப்பட்டார்கள். பின்னர் மரணம் வரை அங்கேயே தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். அவர்களின் துணைவியார் நஸீரா ஃபஹீம் ஸாஹிபா எழுதுகிறார்கள்.

ஒரு முன்னுதாரணமான கணவராக இருந்தார்கள். என்னுடைய உணர்வுகளையும், எண்ணங்களையும் நான் எதுவும் கூறாமலேயே புரிந்து வந்தார்கள். மிகவும் கருத்தில் கொள்ளக்கூடிய தந்தையாக இருந்தார்கள். அன்னாருடைய வாழ்க்கையில் சிறப்பாக தென்படக்கூடிய அம்சங்களில் இறைவனுடனான தொடர்பு, தவக்குல், இறை வணக்கம், துஆ, பொறுமை, தைரியம் சகிப்புத்தன்மை, மார்க்கத்திற்கு தொண்டாற்றும் ஆர்வம் மற்றும் உணர்வு, தன்னுடைய கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வு, மற்றும் குறித்த நேரத்தில் ஒவ்வொரு பணியையும் நிறைவு செய்ய வேண்டும் என்ற உணர்வு போன்ற விஷயங்கள் அடங்கும். கிலாஃபத்துடன் ஆழிய நேசமும் களங்கமற்ற தொடர்பும் இருந்தது. ஒவ்வொரு தனிப்பட்ட மற்றும் ஜமாஅத் பணிகளை செய்வதற்கு முன்பு காலத்தின் கலீஃபாவிற்கு கடிதம் எழுதி வந்தார்கள். மேலும் வழிகாட்டல் பெற்று வந்தார்கள். ஜமாஅத் உறுப்பினர்களுக்கும், தங்களுடைய பிள்ளைகளுக்கும் எப்போதும் இந்த செயல் முன்மாதிரியைக் கொண்டு தர்பிய்யத் வழங்கினார்கள். புரியவைக்கும் விதம் சிறப்பானதாக இருந்தது. குறித்த நேரத்தில் தொழுகைகளை நிறைவேற்றுவது, தஹஜ்ஜுத் மற்றும் நஃபில்களை தொழுவது அவர்களின் வழக்கமாக இருந்தது. அன்னார் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். நோயின் கடுமையிலும், நோய் மிகவும் கடுமையை அடைந்திருந்தபோதும் தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கமும் கவனம் இருந்தது. பேசுவது சிரமமாக இருந்தது. எனவே நோட் புக்கை கொண்டு வாருங்கள்! என்று சைகை மூலமாகவே கூறி அதில் இறை வணக்கம் மற்றும் இறைவனிடம் துஆ செய்வது, எல்லா சிரமங்கள் மற்றும் கஷ்டத்திலும் அவனுடைய

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

சன்னிதானத்தில் குனிய வேண்டும் என்றும் எழுதிக் காட்டினார்கள். என்ன நேர்ந்தாலும் நீங்கள் இறைவனுடைய சன்னிதானத்தை விட்டு விடக்கூடாது என்று தனது மனைவி மக்களுக்கு அறிவுரை செய்து வந்தார்கள். மேலும், இறைவனிடம் மட்டுமே கேட்க வேண்டும்; நீங்கள் இறைவனிடம் உயிருள்ள தொடர்பு வைத்திருங்கள்; அவனுடன் நட்பு பாராட்டுங்கள்: அவன் உங்களை ஒருபோதும் கஷ்டத்தில் தனியாக விட்டு விட மாட்டான் என்று எப்போதும் அறிவுறுத்தி வந்தார்கள். தப்லீஃக் செய்வதற்கும், ஜமாஅத்தை பிறருக்கு அறிமுகம் செய்வதற்கும் வாய்ப்பு கிடைத்தால் அதனை ஒருபோதும் கை நழுவ விட்டதில்லை. ஜமாஅத்தை அறிமுகப்படுத்தும் நூல்களையும், பிரசுரங்களையும் தம்மிடம் வைத்திருப்பார்கள். மருத்துவமனையில் மருத்துவரிடம் சென்றால் அவர்களுக்கும் தப்லீக் செய்வார்கள். மேலும் தான் மருத்துவர்களுக்கும் தப்லீஃக் செய்து வந்துள்ளேன் என்ற இந்த விஷயத்திற்காக மிகவும் நன்றி செலுத்தி வந்தார்கள். எந்நேரமும் முகத்தில் புன்னகை இருந்து வந்தது. நல்ல முறையில் அனைவரையும் சந்திக்கக் கூடியவராக இருந்தார்கள். அன்னாருடைய இயல்பின் காரணமாக அன்னாரின் பக்கம் அனைவரும் ஈர்க்கப்பட்டு விடுவர். அன்னாரின் மரணச் செய்தியைக் கேட்டு நமது ருமேனியன் மிஷன் ஹவுஸிற்கு அருகில் இருக்கக்கூடிய மக்கள் அழுதவாறு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் மிகுந்த துக்கத்தை வெளிப்படுத்தினார்கள். நோய்வாய்ப்பட்டிருந்தபோதும், தமது கடமைகளை வழக்கம்போல் நிறைவேற்றி வந்தார்கள். எதுவரை என்றால் மரணத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு வரை கூட இன்னும்கூற வேண்டும் என்றால் உடல் ஆரோக்கியம் முற்றிலும் பலவீனமாக இருந்தது; மூச்சுவிடுவது கூட சிரமமாக இருந்தது; உண்பதும், பருகுவதும் சிரமமாக இருந்தது; அப்போதும் கூட மெயில் கடிதங்களை எழுதுவது மேலும் ஏதேனும் அவசர இமெயிலுக்கு பதில் எழுதுவது போன்ற பணிகளை செய்தார்கள்.

மேலும் ஒரு முக்கியமான மெயில் ஒன்றுக்கு பதில் கொடுத்தார்கள். ருமேனியாவில் ஜமாஅத் உறுதியாக நிலை பெறவேண்டும் என்பது அன்னாரின் விருப்பமாக இருந்தது. நாட்டினுடைய நிலைமைகளை கருத்தில் கொண்டவாறு அவசியமான மற்றும் நுட்பமான ஞானத்துடன் செயல்பட்டவாறு அதற்காக முயற்சி செய்து வந்தார்கள். தமது பிள்ளைகளிடம் இவ்வாறு கூறி வந்தார்கள்:

உங்களது நடத்தை மற்றும் செயல் எவ்வாறு இருக்க வேண்டும் என்றால், அது தப்லீஃக்கிற்கு காரணியாக அமைய வேண்டும். ருமேனியன் மொழியில் திருக்குர்ஆன் மொழியாக்கத்தை முழுமை செய்ய விரும்பினார்கள். ஒன்று அல்லது ஒன்றரை பாகம் திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்து இருந்தார்கள். ஆனால் பிற பணிகளின் காரணமாக இதில் அன்னாரால் கூடுதல் பணி செய்ய முடியவில்லை. அதேபோன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய நூல்களையும் மொழிபெயர்த்து வந்தார்கள். பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய உள்ளூர் ருமானிய மக்களுடன் எப்போது சந்திப்பு நிகழ்ந்தாலும் அவர்கள் இவர்களுடைய பேச்சு மொழி மிகவும் சிறப்பானதாகவும், இலக்கிய நயத்தைக் கொண்டதாக இருப்பதாகவும் மேலும் பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கும் பேராசிரியரை போன்று உரையாற்றுவதாகவும் கூறிவந்தார்கள். அதாவது ருமானியர் அல்லாத எந்தவொரு நபரும் இவ்வளவு சிறந்த முறையில் ருமேனிய மொழியை பேசுவதை நாங்கள் கண்டதில்லை என்றும் அங்குள்ள உள்ளூர் மக்கள் கூறினார்கள். அவர்களின் மொழி சிறப்பாக இருந்தது. அவர்களின் தாயார் ஸஃபியா பேகம் கூறுகின்றார்கள்:

மர்ஹூமுடைய தாய் வழிப் பாட்டனார் மற்றும் பாட்டி இருவரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியாக இருந்தனர். மர்ஹூம் உயர் நல்லொழுக்கத்திற்கு சொந்தக்காரராக இருந்தார். இதை ஒவ்வொருவரும் குறிப்பிடுகின்றார்கள். நல்ல முறையில் நடந்து கொள்வது, பொறுமை மற்றும் மார்க்க பணிகளின் மீதான ஆர்வத்தை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியிருந்தான். கூறுகின்றார்கள்: மிகவும் கட்டுப்படக்கூடிய மகனாக இருந்தார். அவருடைய தந்தையார் அவர் பிறப்பதற்கு முன்பு ஒரு கனவு கண்டிருந்தார்கள். அதாவது அன்னார் ஒரு குழந்தையை தூக்கி வைத்திருக்கின்றார்கள். அதன் நெற்றியில் சந்திரனும், நட்சத்திரங்களும் இருக்கின்றன. பிறகு கூறுகின்றார்கள் அவர் முபல்லிஃக் ஆன போது, "இன்ஷா அல்லாஹ்! நிச்சயமாக ஒரு நாள் இவர் ஒளிருவார்" என்று எங்களுக்கு புரிய வந்தது. 2006-ம் ஆண்டு இவர்கள் ருமேனியாவிற்கு சென்றார்கள். ருமேனியாவின் முதல் முபல்லிஃக் ஆக இருந்தார்கள். ருமேனியன் மொழியையும் கற்றுக் கொண்டார்கள். மிக அழகிய முறையில் மொழியை கற்றார்கள். அங்கு அவர்கள் பட்டம் பெற்றார்கள். ஜமாஅத்திற்காக பெரும் பணிகளை செய்தார்கள். அங்கு ஜமாஅத்தை (அரசாங்க ரீதியாக) பதிவு செய்தார்கள். மிஷன் ஹவுஸ் கட்டினார்கள். அன்றாட பணிகளை செய்து முடித்திடாத வரை அவர்கள் ஓய்வெடுக்க மாட்டார்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

அவர்களுடைய சகோதரர் ரஃபீயுத்தீன் ஸாஹிப் கூறினார்கள்:

மெட்ரிக் முடித்த பிறகு சுயமே யாரும் கூறாமலேயே ஜாமிஆவிற்கு சென்று விட்டார்கள். பிறகு வக்ஃபை மிகவும் அழகிய முறையில் நிறைவேற்றினார்கள். உண்மையிலேயே அவர்கள் அவ்வாறு நிறைவேற்றினார்கள். விடுமுறை எடுத்ததில்லை. அவர்களுடைய இளைய சகோதரி மரணம் அடைந்த நேரத்தில் மட்டும் அவர்கள் விடுப்பு எடுத்தார்கள். அது தவிர அவர்கள் விடுப்பு எடுத்ததில்லை.

அவர்களுடைய மகன் மிர்ஸா லபீத் கூறுகிறார்கள்:

மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த போது சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டது. இந்தக் கல்வியை நான் முழுமை செய்வேனா? மாட்டேனா? என்ற கவலை எனக்கு இருந்தது. ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் அழைத்து எனக்கு தைரியம் அளிப்பார்கள். ஸலவாத் ஓதுமாறும், தஹஜ்ஜுத் தொழுது வருமாறும், துஆக்கள் செய்யும்படியும் அறிவுரை வழங்குவார்கள். கடினமாக உழைக்குமாறும் அறிவுறுத்துவார்கள். இவ்வாறு அவர்கள் என்னை மிகவும் ஊக்கப்படுத்தி வந்தார்கள்.

இவர்களின் இரண்டாவது மகன் தானிஷ் கூறுகின்றார்:

யாரெல்லாம் அன்னாரை சந்தித்து இருந்தார்களோ அவர்கள் அனைவரும் அன்னாரின் மறைவுச் செய்தியை கேட்டு அழத் தொடங்கினர்; மேலும், அன்னார் மிகவும் நல்லவராகவும், தூய மனிதராகவும் இருந்தார்கள்; எல்லையற்ற பரிவு காட்டக் கூடியவராக இருந்தார்கள் என்றும் கூறினர்.

லிட்டோவியாவின் முபல்லிஃக் எழுதுகின்றார்கள்:

மர்ஹூம் மிகவும் கடின உழைப்பாளியாகவும், நல்லொழுக்கம் உடையவராகவும், நல்ல இயல்புடையவராகவும் இருந்தார்கள். அவர்களுடைய பணிவு, தன்னடக்கம் மற்றும் எளிமை ஆகியவை ஒவ்வொரு நபரையும் அவர்களின் பால் ஈர்த்தது. அவர்களின் இயல்பில் ஒரு குறிப்பிடத்தக்க உத்வேகம் இருந்தது. முகத்தில் புன்னகை இருந்தது. ருமேனியாவில் சில வெளிநாட்டு மாணவர்கள் கல்வி பயில்வதற்காக அங்கு தங்கியிருந்தார்கள். அந்த மாணவர்களோடும் மிகவும் கருணையுடனும் நேசத்துடனும் நடந்து கொண்டார்கள்.

மருத்துவக்கல்லூரியின் மாணவராக இருந்து தற்போது மருத்துவராகிவிட்ட தஸ்வீர் ஜாவித் ஸாஹிப் கூறுகிறார்கள்:

மாணவர்களுடைய ஆன்மீகத் தர்பியத்திற்காகவும் அஹ்மதிகள் படித்து வந்த பல்கலைக்கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் இரயில் அல்லது பேருந்தில் பல மணி நேரம் பயணம் செய்து சென்று வந்தார்கள். ஜமாஅத் பணத்தை சேமிக்க வேண்டும் என்ற எண்ணம்

அன்னாருக்கு அதிகம் இருந்து வந்தது. எந்த அளவிற்கு என்றால் ஜமாஅத் பணம் சேமிக்க வேண்டும் என்பதற்காக அட்டைகள் மற்றும் பல்வேறு பொருட்களை ஒன்று சேர்த்து சுயமே சொற்பொழிவு மேடை போன்றவற்றையும் உருவாக்கி வந்தார்கள்.

கடும் நோயின் நிலையிலும் கூட, இறுதி நொடிப்பொழுது வரை அவர்கள் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியிலும் தொழுகைகளை பேணினார்கள். மிகவும் எளிய மற்றும் பணிவான மனிதராக இருந்தார்கள். குழந்தைகளுக்கும், எங்களுக்கும் அவர்கள் நேர்மை மற்றும் பணிவை கற்றுக் கொடுக்க முயற்சி செய்தார்கள். ருமேனியாவைச் சார்ந்த அஸீம் ரோமா ஷம்ஸ் என்ற நபர் கூறுகிறார்: தேர்வு மிகவும் கடினமானதாக இருந்தது. தேர்வில் தேர்ச்சி பெறுவேனா? மாட்டேனா? என்ற சந்தேகம் இருந்தது. நீங்கள் கவலைப்படாதீர்கள்! என்று எனக்கு முரப்பி ஸாஹிப் ஆறுதல் வழங்கினார்கள். மேலும், தேர்விற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நான் எப்படிப்பட்ட ஒரு விஷயத்தை புரிய வைப்பேன் என்றால், நீங்கள் இன்ஷா அல்லாஹ்! வெற்றி பெற்று விடுவீர்கள் என்று என்னிடம் கூறினார்கள்.

மேலும் அதற்கான பயனும் அவருக்கு கிடைத்தது. ருமேனியாவின் ஒரு புதிய அஹ்மதி அதீல் அத்ரியான் (Adrian) என்பவர் கூறுகின்றார்:

நான் அன்னாரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அடுத்த நாள் அன்னார் ஒரு ஜமாஅத் பணி தொடர்பாக என்னிடம் உதவி கேட்டார்கள். அதற்காக அருகில் உள்ள ஒரு நகரத்திற்கு செல்ல நேர்ந்தது. நாங்கள் அந்த பணிக்காக சென்ற போது பயணத்தின் வழியில் பல்வேறு தலைப்புகளில் அவர்கள் பேசி வந்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் சில நிமிடங்களுக்காக முரப்பி ஸாஹிப் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் என்னிடத்தில் இவ்வாறு கூறினார்கள்: அதாவது தனக்கு ஏதாவது ஆகிவிட்டால் தன்னை இங்கேயே அடக்கம் செய்ய வேண்டும் என்று அன்னார் விரும்பினார்கள். ஏனெனில் "அன்னார் இங்கே இருந்தார்கள்; மேலும் இங்கிருந்து நேர்மறையான மாற்றத்தை உருவாக்கினார்கள்" என்பது நினைவு கூறப்பட வேண்டும் என்பதற்காக அவ்வாறு விரும்பினார்கள்.

பிறகு எழுதுகின்றார்கள்: உடல் நலம் மிகவும் மோசமான போதும் கூட அன்னார் எப்பொழுதும் தமது லேப்டாப்பில் பணி செய்து வந்தார்கள். தாமே கடிதம் எழுதி தம்முடைய பணியை தொடர்வதற்கு முயற்சி செய்தார்கள். எப்பொழுதும் இறைவனிடம் மார்க்கம் மற்றும் பிறருக்காக கவலை கொண்டவராக இருந்தார்கள். தனது இறுதி மூச்சு வரை ஒருபோதும் ஒரு நொடி பொழுது கூட தன்னைப் பற்றி அவர்கள் சிந்தித்ததில்லை.

அடுத்து இந்த புதிய அஹ்மதி எழுதுகின்றார்:

நான் முரப்பி ஸாஹிப் அவர்களை தமது நேரம், தூக்கம் போன்றவற்றை பிறருக்காக தியாகம் செய்வதை கண்டேன். பிறருக்கு தொண்டு செய்வதற்காக எப்பொழுதும் வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்பதற்காக நன்றி செலுத்தி வந்தார்கள். கூறுகின்றார்கள்:

நான் ஒருபோதும் அன்னாருடைய நாவிலிருந்து எவர் தொடர்பாகவும் சிறிதளவு தீய விஷயத்தைக் கூட கேட்டதில்லை. அன்னார் குடும்பத்தினருக்காக மட்டுமின்றி எங்களுடைய ருமேனியா ஜமாஅத்திற்காகவும், அதன் உறுப்பினர்களுக்காகவும் அழுது, அழுது துஆ செய்து வந்தார்கள். ஒரு நாள் கூட விடுமுறை எடுத்ததில்லை. மேலும் அதிக ஓய்வு எடுப்பதற்கும் அவர்கள் விரும்பியதில்லை. ஏனென்றால் இது அவருடைய கடமையாகும். ஜமாஅத்திற்கு எல்லா வகையிலும் சிறந்த திறமையுடன் தொண்டாற்ற வேண்டும் என்று தான் விரும்புவதாகவும், அதற்காக தன்னுடைய உறக்கம் அல்லது ஆரோக்கியத்தை எந்த அளவிற்கும் தியாகம் செய்ய வேண்டியது வந்தாலும் அதற்கு தயாராக இருப்பதாகவும் கூறிவந்தார்கள். எப்பொழுதும் இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து வந்தார்கள். பிறருக்காக அதிகமாக துஆ செய்யுமாறும், இறைவனுடைய உதவியில் முழுமையான நம்பிக்கை வைக்குமாறும் அறிவுரை செய்து வந்தார்கள்: ஆர்வமூட்டி வந்தடைந்தார்கள்.

அந்த புதிய அஹ்மதி எழுதுகின்றார்:

எனக்கு முரப்பி ஸாஹிப் முரப்பியாக மட்டும் இருக்கவில்லை : மாறாக ஒரு தந்தையைப் போன்று இருந்தார்கள். எனக்கு அசாதாரணமான ஓர் ஆன்மீக வழிகாட்டியாகவும் இருந்தார்கள். ஒரு மிகச்சிறந்த நெருங்கிய நண்பராகவும் இருந்தார்கள்.

இந்த புதிய அஹ்மதி எடுத்துரைத்த விஷயங்களே முரப்பியினுடைய பண்புகள் ஆகும். இந்த தர்பிய்யத் மற்றும் முன்மாதிரியே தப்லீக் மற்றும் தர்பிய்யத்தில் எளிமையை ஏற்படுத்துகின்றது.

அந்நிய நாட்டில் மார்க்கத்திற்காக தியாகமானார்கள். எனவே இந்த அடிப்படையில் அவர்களின் அந்தஸ்து ஷஹீதுடைய அந்தஸ்தாகும். இறுதி மூச்சுவரை தனது உடன்படிக்கையை விசுவாசத்துடன் சிறப்பாக நிறைவேற்றினார்கள்.

எப்பொழுதும் நானும் கண்டிருக்கின்றேன்; அவருடைய முகத்தில் புன்னகை இருந்து வந்தது. மொரீஷியஸில் செயற்களத்தில் மரணமடைந்த மௌலவி உபைதுல்லாஹ் ஸாஹிப் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் குறிப்பிடும்போது ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கியவாறு, இப்படிப்பட்ட மக்கள் ஷஹீத் ஆவார்கள் மேலும், மர்ஹூமிடமிருந்து நாம் படிப்பினை பெற வேண்டும் என்று கூறினார்கள். (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 8, பக்கம் 263 - 264. குத்பா பேருரை செப்டம்பர் 7. 1923)

நிச்சயமாக ஃபஹீம் நாஸிர் ஸாஹிப் அவர்களின் அந்தஸ்தும், அவ்வாறே இருந்தது. இது ஒரு முன்மாதிரியாக இருந்தது; இது ஒரு பாடமாகும். குறிப்பாக வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு ஒரு பாடமாகும்; அல்லாஹ் மர்ஹூமுடைய அந்தஸ்தை உயர்த்துவானாக! அவர்களுடைய மனைவி, பிள்ளைகளுக்கும், தாயாருக்கும் மற்றும் அனைவருக்கும் பொறுமையை வழங்குவானாக!

அடுத்த நற்குறிப்பு மதிப்பிற்குரிய அப்துல் அலீம் ஃபாரூக்கி ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கனடாவைச் சார்ந்த அப்துல் ரஷீத் ஃபாரூக்கி ஸாஹிப் அவர்களுடைய மகனாக இருந்தார்கள். கடந்த நாட்களில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

انالله وانااليه راجعون

மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார்கள் அவர்களுடைய மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்றால், மூன்று ஆயுதம் ஏந்திய நபர்கள் அவருடைய வீட்டில் நுழைந்தார்கள். இவர்கள் தமது அறையில் உறங்கிக் கொண்டிருந்தார்கள். மனைவியும், மூன்று குழந்தைகளும் கீழ்தளத்தில் இருந்தனர். மகனும் தனது அறையில் இருந்தார். கொள்ளையர்கள் அனைவருடைய மொபைலையும் பறித்துக் கொண்டனர். மர்ஹூம் கூச்சலைக் கேட்டு எழுந்தார்கள். ஒரு கொள்ளையன் அன்னாருடைய அறைக்குள் நுழைந்ததால் மர்ஹூம் அவனை பயமுறுத்த விரும்பினார்கள். அப்போது அவன் அன்னாருடைய மூக்கு மற்றும் தோளில் ஒரு தடியை கொண்டு அடித்து விட்டு ஓடி விட்டான். அப்போது மர்ஹூம் தனது மகனின் அறையை நோக்கி செல்ல முயன்ற போது, ஒரு கொள்ளைக்காரன் – அவன் ஏணிப்படிக்கு அருகில் நின்று கொண்டிருந்தான்; அவன் அன்னாரின் மீது இரண்டு முறை துப்பாக்கியால் சுட்டான். ஒரு குண்டு மர்ஹூமுடைய இதயத்திற்கு அருகில் பட்டது. அது உடலை துளைத்துக் கொண்டு உடலின் மறுபக்கம் வழியாக வெளியேறிவிட்டது. நிகழ்விடத்திலேயே அன்னாரின் மரணம் நிகழ்ந்து விட்டது.

انالله وانااليه راجعون

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபி மவ்லவி குத்ரதுல்லா ஸாஹிப் ஸனோரீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் மௌலவி முஹம்மது ஹுஸைன் ஸாஹிப் (ரலி) ஆகியோரின் கொள்ளுப் பேரர் ஆவார்கள். செயல் துடிப்பு மிக்க ஜமாஅத் உறுப்பினராக இருந்தார்கள். ஐவேளை தொழுகை மற்றும் தஹஜ்ஜுத் தொழுகையை முழுமையாக பேணக் கூடியவராக இருந்தார்கள். துடிப்புடன் தப்லீக் செய்பவராக இருந்தார்கள். தம்முடைய பகுதியில்

உள்ளூர் தப்லீஃக் செயலராக தொண்டு செய்யும் நற்பேறு கிடைத்தது. தற்போது அந்த பகுதியினுடைய சத்ராகவும் தொண்டாற்றி வந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் அவர்களுடைய ஒரு மனைவி, ஒரு மகன் மற்றும் மூன்று மகள்கள் உள்ளனர்.

மிஷினரி இன்சார்ஜ் ஸக்கரியா கான் ஸாஹிப் மார்ஹூமின் உறவினர் ஆவார்கள். எழுதுகின்றார்கள்:

மிகவும் நல்லியல்பு கொண்டவராகவும், மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய நபராகவும் இருந்தார்கள். மார்ஹூமின் மனைவி இவர்களிடம் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

மார்ஹூம் முறையாக தஹஜ்ஜுத் தொழுகையை பேணக் கூடியவராக இருந்தார்கள். ஐவேளை தொழுகைகளை அழகான முறையில் நிறைவேற்றி வந்தார்கள். இறைவன்பால் மக்களை அழைப்பதில் துடிப்புமிக்க நபராக இருந்தார்கள். தனது பணிச்சுமைகளுக்கு மத்தியிலும் இரவு, பகலாக ஜமாஅத் பணிகளில் மூழ்கி இருந்தார்கள். பொருள் தியாகங்களிலும் அதிக அதிகமாக பங்கெடுத்து வந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழமான மற்றும் விசுவாச மிக்க தொடர்பு இருந்தது.

அன்னாரின் துணைவியார் மர்யம் ஸாஹிபா அவர்கள் எழுதுகின்றார்கள்:

சிறந்த கணவராக இருந்தார்கள். வாழ்க்கையில் அவரிடமிருந்து நான் பல விஷயங்களை கற்றுக் கொண்டுள்ளேன். தப்லீஃக் செய்யும் ஆர்வம் மிக அதிகமாக இருந்து வந்தது. தப்லீஃக் செய்வதில் மிகவும் வியக்கத்தக்க ஆர்வம் கொண்டிருந்தார்கள். எப்பொழுதும் புதுப்புது தப்லீஃக் திட்டங்களை சிந்தித்து வந்தார்கள். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி செய்து வந்தார்கள். கிலாஃபத்துடனான தொடர்பு பற்றியும் அன்னார் எழுதியுள்ளார்கள்:

அண்டை அயலாரோடும்,தமது பகுதியில் வசிப்பவரோடும் நல்ல முறையில் நடந்து வந்தார்கள். அனைவரும் அன்னாரை புகழ்ந்து வந்தார்கள். நல்ல அழகிய இயல்புடைய மற்றும் கருணை கொண்டவராக இருந்தார்கள். வீட்டில் எப்பொழுதும் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். குழந்தைகளுக்கும் அறிவுறுத்தி வந்தார்கள்.

மகள் அன்பிற்குரிய உஸ்மா கூறுகின்றார்கள்:

சின்னச் சின்ன விஷயங்கள் முதல் பெரிய தேவைகள் வரை கவலையுடையவராக இருந்தார்கள். நாள் முழுவதும் தனது பணியிலோ அல்லது ஜமாஅத் பணியிலோ மூழ்கி இருப்பார்கள். அப்போதும் கூட இரவு வேளையில் எங்களுடைய அறைகளுக்கு வந்து எங்களிடம் நலம் விசாரிப்பார்கள். உங்களுடைய நேரம் எப்படி கழிந்தது? தொழுதீர்களா? இல்லையா ?என விசாரிப்பார்கள். தன்னைப் பற்றியும் கூறுவார்கள். இவ்வாறு எங்களுக்கு அவர்களுடன் நட்பு ரீதியிலான ஒரு தொடர்பு இருந்தது.

மகன் அன்பிற்குரிய கழீம் கூறுகிறார்கள்:

தந்தையார் எங்களுக்கு ஒரு ரோல் மாடலாக இருந்தார்கள். இன்ஷா அல்லாஹ்! அவர்களுடைய அடிச் சுவட்டின் படி நடப்பதற்கு நான் முயற்சிப்பேன்.

தப்லீஃக் பணிக்காக நாங்கள் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை சென்று வந்தோம். எங்கு வாய்ப்பு கிடைக்குமா அங்கு பப்ளிக் ஸ்டால் போடுவோம். அன்னார் என்னை திருக்குர்ஆனை மனனமும் செய்ய வைத்தார்கள். இங்கு இருக்கக்கூடிய அன்னாருடைய சகோதரரின் மகன் இந்த அனைத்து நற்பண்புகளையும் எடுத்துரைத்துள்ளார்கள். மிகவும் தூய உள்ளம் கொண்டவராகவும்,மிகவும் நல்லொழுக்கத்திற்கு சொந்தக்காரராகவும் இருந்தார்கள். அவர்களுக்கு உம்ரா செய்வதற்கான நல்வாய்ப்பும் கிடைத்திருந்தது. அங்கும் நாங்கள் அவர்களை இறை வணக்கத்தில் எந்த அளவிற்கு மூழ்கியிருந்ததைக் கண்டோம் என்றால், அது மிகவும் புகழத் தக்கதாகும்.

பெண் பிள்ளைகளுடைய தர்பிய்யத்தை பற்றிய கவலை அவர்களுக்கு இருந்து வந்தது. 15 வயதுடைய மகள் இருந்தார். அவருக்கு ஃபோன் வாங்கிக் கொடுக்க வேண்டுமா? கூடாதா? என்று என்னிடம் கேட்டார்கள். பின்னர், என்னுடைய வழிகாட்டல் அவருக்கு கிடைத்த போது அதன்படி அவர்கள் அமல் செய்தார்கள். ஒவ்வொரு விஷயத்தையும் மிக நுணுக்கமாக பார்க்கக் கூடியவராக இருந்து வந்தார்கள். கட்டாய சந்தாக்கள் மட்டுமின்றி, ஏனைய பிற திட்டங்களிலும் பரந்த மனப்பான்மையோடு அதிகம் அதிகமாக பங்கெடுத்தார்கள். பாகிஸ்தானிலும் ஏழைகளுக்கு தொண்டாற்றுவதற்காக பெரும் தொகையை அனுப்பி வந்தார்கள்.

அன்னாரின் தாயார் கூறுகின்றார்கள்:

எனது மகன் ஜமாஅத்திற்காக மாய்ந்து விடக்கூடிய மற்றும் கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பு கொண்டவராக இருந்தார். எல்லா விஷயங்களிலும் உண்மைக்கு முக்கியத்துவம் வழங்கி வந்தார். ஒவ்வொரு சிறியவரோடும் பெரியவரோடும் நேசத்துடன் நடந்து வந்தார். தப்லீஃக் செய்யும் ஆர்வம் மிகவும் அதிகமாக இருந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தப்லீஃக்கிற்காக செல்வார். தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார். பிறருக்கு உதவி செய்யக் கூடியவர்.

கூறுகின்றார்கள்:

ஜமாஅத்தாக தொழுவதில் அவர்களுக்கு எந்த அளவிற்கு ஆர்வம் இருந்தது என்றால் ஒரு முறை பணியில் இருக்கும் போது, எனக்கு ஃபோன் செய்து, நீங்கள் தொழவில்லை என்றால் சற்று காத்திருங்கள்; நான் வந்து கொண்டிருக்கின்றேன்; நாம் சேர்ந்து ஜமாஅத்தாக தொழுவோம் என்று கூறினார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! தாயார் மனைவி மற்றும் குழந்தைகளுக்கு பொறுமையை வழங்குவானாக! அன்னாருடைய நல்ல முன்மாதிரி மற்றும் அன்னாருடைய விருப்பங்களுக்கேற்ப அன்னாருடைய சந்ததிகள் நடக்கக் கூடியவர்களாக இருப்பார்களாக!

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

**துஆ தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிவுரை**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறையருள் நெருங்கிவிடும்போது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வழிவகைகளை இறைவன் ஏற்படுத்துகின்றான். உள்ளத்தில் ஒரு பணிவும், உருக்கமும் ஏற்படுகிறது. ஆனால், பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படும் காலம் வரவில்லை என்றால் உள்ளத்தில் நிம்மதியும், திரும்பும் நிலையும் ஏற்படுவதில்லை. இயல்பை எவ்வளவு வற்புறுத்தினாலும் இயல்பு கவனம் செலுத்துவதில்லை. இதன் காரணம் என்னவென்றால், சிலவேளை இறைவன் தன்னுடைய குறிப்பிட்ட முடிவை ஏற்க வைக்க நாடுகின்றான்; இன்னும் சிலவேளை வேண்டுதலை ஏற்றுக் கொள்கிறான். எனவே இறை கட்டளையின் அறிகுறியைக் காணாத வரை ஏற்றுக் கொள்வதை நான் குறைவாகவே எதிர்பார்க்கின்றேன். மேலும், பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதனால் ஏற்படும் மகிழ்ச்சியை விட இறைவனின் குறிப்பிட்ட முடிவில் மிகுந்த மகிழ்ச்சியுடன் திருப்தியடைகின்றேன். ஏனெனில், இறை முடிவில் மனநிறைவு கொள்வதனால் ஏற்படும் காரணிகளும், அருள்களும் அதனை விட மிகுதியானவையாகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 460)

* * * * * * * *

*நபிமொழியிலிருந்து...*

**சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)**

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் கனடா சுற்றுப் பயணம் - 2013**

வான்கூவர் பிரிட்டிஷ் கொலம்பியா கனடாவில் கட்டப்பட்ட பள்ளிவாசல் பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசல் திறப்பு விழாவின் போது பல்வேறு சமய சமுதாய அரசியல் பிரமுகர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சீர்மிகு தூதுச் செய்திகள்)

இந்தப் பள்ளிவாசலின் அழகும், வசதி வாய்ப்புகளும் வருங்கால சந்ததியினருக்கு இறை வணக்கம் செய்வதற்கும், தங்களுக்குள் தொடர்பை வலுப் பெறச் செய்வதற்கும் ஒரு முக்கியமான இடமாக இருக்கும். கனடா அரசின் சார்பில் நான் உங்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்

மேலும் உள்ளத்தை கவரக் கூடிய திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுத்து பணி செய்த மக்கள் அனைவருக்கும் இந்த மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பத்தில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்

(கனடாவின் பிரதம மந்திரி, மாண்புமிகு இஸ்டீஃபன் ஹார்பர்)

மார்க்கச் சுதந்திரம் என்பது மார்க்க விவகாரம் அல்ல ; மாறாக மனித குலத்தின் விவகாரம் ஆகும். நம்முடைய அலுவலகத்தின் பணி என்பது அநீதிக்கு இலக்காகும் மார்க்கங்களுடன் தொடர்புள்ள அந்த அனைத்து மக்களையும் பாதுகாப்பதாகும்

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

## (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் கனடா, வான்கூவர் சுற்றுப்பயணம் -2013

(அறிக்கை - அப்துல் மாஜித் ஸாஹிப் வகீலுத் தப்ஷீர் லண்டன்)

**பள்ளி வாசல் திறப்பு விழாவின் போது ஒரு சிறப்பு நிகழ்ச்சி**

அதற்கு பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹு) அவர்கள் ஹாலிற்கு வருகை தந்தார்கள். அங்கு பள்ளி வாசல் திறப்பு விழாவிற்காக ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹு) அவர்கள் வருகை தருவதற்கு முன் விருந்தினர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்து விட்டார்கள். இன்று இந்த நிகழ்ச்சியில் 670 விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த விருந்தினர்களில் இரு சென்டார்ஸ், ஒரு தூதுவர், டாக்டர் ஆண்ட்ரூ பென்னட் ஆஃபிஸ் ஆஃப் தி ரிலிஜியஸ் ஃப்ரிடம், ஆறு தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள், எட்டு மாநில பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்த எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஹான் மன்மீத் புல்லர் சர்வீஸ் மினிஸ்டரும் ஒருவர் ஆவார். ஒருவர் பாராளுமன்ற உறுப்பினரும், லேங்க்லே மேயரும் ஆவார்.

இவர்களைத் தவிர்த்து சிட்டி ஆஃப் கோ குயிட்லம் டெல்டா மற்றும் சிட்டி ஆஃப் பிராம்டன் உடைய மேயர்களும் ஆவர். பல்வேறு இடங்களைச் சேர்ந்த ஏழு கவுன்சிலர்களும் கலந்து கொண்டனர். சீஃப் ஆஃப் போலிஸ் டெல்டா மற்றும் இரு தீயணைப்புத் துறையின் சீஃப்களும் கலந்து கொண்டனர். இவர்களைத் தவிர்த்து கன்சர்வேடிவ் பார்டியுடைய லீடர் மற்றும் சில முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இவர்களைத் தவிர்த்து கவுன்சில் ஜெனரல் ஆஃப் கொலம்பியா, கவுன்சில் (கவுன்ஸ்லேட் இந்தியா) ஆன்ரேரி கவுன்சில் ஆஸ்டிரியா, உகாண்டா, சுரிநாம் ,பார்படாஸ் , லெக்ஸம் பர்க், ஈக்வெடார், ஜமைக்கா கலந்து கொண்டனர். இவர்களைத் தவிர்த்து பல்வேறு வகையான சிந்தனையாளர்கள், மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த மக்களும் கலந்து கொண்டனர். ஹுஸூர் அவர்கள் ஹாலிற்குள் நுழைந்ததும் அனைத்து விருந்தினர்களும் எழுந்து நின்று ஹுஸூர் அவர்களை வரவேற்றனர்.

**பைத்துர் ரஹ்மான் பள்ளி வாசல் திறப்பு விழா நிகழ்ச்சி வான்கூவர், பிரிட்டிஷ் கொலம்பியா**

இந்த நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய உஸ்மான் மலக் ஸாஹிப் திருக்குர்ஆன் ஓதினார்கள். அதனுடைய ஆங்கில மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய ஸல்மான் ஹாஷிமி அவர்கள் வாசித்துக் காட்டினார்கள். அதற்குப் பிறகு தேசிய செயலர் வெளியுறவுத் துறை ஆஸிஃப் கான் ஸாஹிப் அவர்கள் அறிமுக உரையை நிகழ்த்தினார்கள். அதற்குப் பிறகு விருந்தினர்கள் உரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியின் முதல் உரை ஸ்பீக்கர் லூயிஸ் ஜான்ஸன் அவர்களுடையதாக இருந்தது. திருமதி லூயிஸ் ஜாக்ஸன் அவர்கள் 1973ல் டெல்டா நகரத்தின் முதல் பெண் கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். 1999 முதல் இந்த நகரத்தின் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று வரை மேயராக பணி செய்து வருகிறார்கள்.

திருமதி லூயிஸ் ஜாக்சன் அவர்கள் தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்: பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசலுடைய மகத்துவம் வாய்ந்த இந்த மகிழ்ச்சிக்குரிய திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதும், மேலும் இந்தப் பள்ளி வாசல் திறப்பு விழா நிகழ்ச்சிக்காக ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஸாஹிப் அவர்கள் நம்மிடம் முதல் முறையாக வருகை தந்திருப்பதும் உண்மையாகவே கண்ணியத்திற்கு காரணமாக இருக்கின்றது; இந்தப் பள்ளிவாசல் பிரிட்டிஷ் கொலம்பியாவுடைய முதல் பெரிய பள்ளிவாசல் ஆகும். பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஜமாஅத்தே அஹ்மதிய்யா இந்த பள்ளிவாசலைக் கட்டியது எனக்குப் பெருமையாக இருக்கிறது. இந்த மிகச் சிறந்த, அழகான பள்ளி வாசலைப் பார்க்கும் போது ஒரு நிம்மதியான உணர்வு ஏற்படுகின்றது.

உண்மையில், இந்த பள்ளிவாசல் இந்த இடத்தின் முக்கிய அடையாளமாகிவிட்டது. மேலும்,உங்கள் வரவு நல்வரவாகட்டும்! என்று கூறி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்களை வரவேற்கிறேன்.

நீங்கள் இப்போது எங்களுடைய சமூகத்தின் பாரம்பரிய மற்றும் சமூக கட்டமைப்பின் முக்கிய அங்கம் ஆவீர்கள்.

மார்க்கங்களுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்பெறச் செய்கின்ற விஷயத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் அறியப்படுவது போன்று, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இந்தப் பள்ளிவாசலும் டெல்டாவில் மார்க்கங்களுக்கு இடையிலான தொடர்புகளை நிலை நாட்டுவதற்கான நமது கூட்டுப் பொறுப்பின் நிரந்தர அடையாளமாகத் திகழும்.





திருமதி லூயிஸ் ஜாக்ஸன் அவர்கள், கூறினார்கள்:

அமைதி, கண்ணியம், மரியாதை ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தல் மற்றும் எல்லோரிடத்தும் அன்பு எவரிடத்தும் பகையில்லை போன்ற விஷயங்களை நிலை நாட்டுவது தொடர்பான ஹுஸூர் அன்வர் அவர்களின் முயற்சிகள் குறித்து எனக்கு தெரிவிக்கப்பட்டது.

நாம் அனைவரும் செயல்படுத்த விரும்பும் அந்த விதிமுறைகளின் வெளிப்பாடே இந்த அனைத்து விஷயங்களுமாகும்.

திருமதி லூயிஸ் ஜாக்ஸன் அவர்கள் கூறினார்கள்.

பள்ளிவாசல்கள் கட்டுவது மற்றும் இது மட்டுமின்றி ஏனைய சமூகப் பணிகள், கல்வி, ஆரோக்கியத் திட்டங்கள் போன்றவை சமூகத்தில் அமைதி, மனிதகுலத் தொண்டு மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றை உள்ளூர் சுற்றுச் சூழலில் மேம்படுத்துவதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்ந்து செய்து வரும் கடும் முயற்சிகளை வெளிப்படுத்துகின்றன. என்னுடைய நற்பேறு என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பெரும்பாலான நபர்களுடன் உறுதியான தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது.

இன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு, அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்த அதிகமான நபர்களுடன் வருங்காலத்தில் உறுதியான தொடர்புகள் உருவாகி விடும் என்ற நம்பிக்கை உள்ளது. ஹுஸூர் அவர்களுக்கும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கும் மிக முக்கியமான வெற்றியில் மீண்டும் ஒரு முறை வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இறைவன் இந்த அழகிய பள்ளி வாசலை நிரந்தரமான அருளுக்குரியதாக ஆக்குவானாக!

இந்த நிகழ்ச்சியில் இரண்டாவது விருந்தினரின் உரை ஸ்பீக்கர் ஹானரபுள் கெர்ரிலின்னே ஃபின்ட்லே அவர்களுடையதாகும்.

அன்னார் கன்ஸர்வேட்டிவ் பார்ட்டியைச் சேர்ந்தவர் ஆவார். அன்னார் மினிஸ்டர் ஆஃப் ஜஸ்டிஸின் தனிச் செயலராக பணி புரிந்து உள்ளார்கள். மேலும் தற்போது தற்காப்புத் துறையில் அஸோஸியேட் அமைச்சராக பணி புரிந்து வருகிறார்கள்.

அன்னார் கனடாவின் அமைச்சர் உயர்திரு ஸ்டீஃபன் ஹார்பர் உடைய தூதுச் செய்தியை பள்ளி வாசல் திறப்பு விழாவின் நிகழ்ச்சியில் வாசித்துக் காட்டினார்கள். அன்னார் "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று கூறி தம்முடைய உரையைத் தொடங்கினார்கள். மேலும் அன்னார் இந்த பள்ளிவாசல் நிகழ்ச்சியில் கலந்து கொள்வது கண்ணியத்திற்கு காரணமாக இருக்கிறது. அன்னாரிடம் கனடாவின் அமைச்சர் ஸ்டீஃபன் ஹார்பர் உடைய வாழ்த்துக்குரிய தூதுச் செய்தியைத் தவிர்த்து மல்டி கல்ச்சுரல் சிட்டிசன்ஷிப் அமைச்சர் கென்னி ஜேஸனுடைய வாழ்த்துக்குரிய செய்தியும் இருக்கிறது. ஆனால் குறைந்த நேரமே இருப்பதின் காரணமாக கனடாவின் அமைச்சர் உடைய தூதுச் செய்தியை மட்டுமே வாசிப்பார்கள்.

கனடாவின் அமைச்சர் உடைய சிறப்புத் தூதுச் செய்தி

அன்னார் கனடாவின் அமைச்சருடைய கீழ் கண்ட சிறப்பு தூதுச் செய்தியை வாசித்துக் காட்டினார்கள்.

பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசலுக்காக ஒரு சான்றிதழ் வழங்கப்படுகிறது. பிரிட்டிஷ் கொலம்பியாவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மிகப் பெரிய பள்ளிவாசல் திறப்பின் காரணமாக இன்றைய நாள் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். இந்தப் பள்ளிவாசலின் அழகும், வசதி வாய்ப்புகளும் வருங்கால சந்ததியினருக்கு இறை வணக்கம் செய்ய, தங்களுக்குள் தொடர்பை வலுப் பெறச் செய்வதற்குரிய ஒரு முக்கியமான இடமாக இருக்கும். கனடா அரசின் சார்பில் நான் உங்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளத்தை கவரக் கூடிய திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுத்து பணி செய்த அனைவருக்கும் இந்த மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பத்தில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தயவுகூர்ந்து என்னுடைய நல்விருப்பங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்!

(கனடாவின் பிரதம அமைச்சர் மாண்புமிகு ஸ்டீஃபன் ஹார்பர்)

அதன் பிறகு டாக்டர் ஆண்ட்ரூ பீ. கே. பென்னட் அவர்கள் கனடாவின் மார்க்க சுதந்திரத்திற்கான அம்பாஸிடராக இருக்கிறார்கள். 19.02.2013 அன்று கனடாவில் தி ஆஃபிஸ் ஆஃப் ரிலீஜியஸ் ஆரம்பிக்கப்பட்டது. இதனுடைய நோக்கம் இன்றைய உலகில் பலஹீனமான மார்க்கங்களை பாதுகாப்பது மற்றும் மத வெறுப்பு மற்றும் சகிப்புத் தன்மையற்ற நிலைக்கு எதிராக குரல் எழுப்புவதாகும்; மேலும், கனடாவில் பல்வேறு சமூகத்தினர் தங்களுக்குள் ஒற்றுமையாக இருந்து இணைந்து வாழ்வதாகும்; மேலும் உலகில் சகிப்புத்தன்மையை பரஸ்பரம் மேற்கொண்டு வாழ்வதற்கான வழிவகைகளை பின்பற்றுவதாகும். அன்னார் யூ. கே. வில் நடைபெற்ற அமைதிக் கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள்.

மேலும் அன்னார் தமது உரையில் இன்று உங்களுடன் நான் இருப்பது மகிழ்ச்சி தரும் நற்பேறு ஆகும். மூன்று மாதங்களுக்கு முன்பு கனடாவின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "மார்க்க சுதந்திரம்" என்ற அலுவலகம் திறப்பிற்கான அறிவிப்பை செய்தார்கள். அப்போதிருந்து இப்போது வரை நான் மூன்று முறை இந்த சிறப்பிற்குரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் நற்பேறினைப் பெற்று உள்ளேன். ஜமாஅத்தின் உறுதி மற்றும் 'எல்லோரிடத்தும் அன்பு எவரிடத்தும் பகையில்லை என்ற தூதுச் செய்தி போன்றவற்றின் மீது ஜமாஅத்தின் அடித்தளம் இருப்பதைப் பார்த்து எனக்கு வியப்பு அதிகமாகிக் கொண்டே செல்கிறது. இந்த தூதுச் செய்தி இன்றைய உலகில் பல்வேறு மதங்களுக்கு இடையில் சகிப்புத்தன்மை இன்மையின் காரணமாக பெரும்பாலான நேரங்களில் ஆபத்திற்குரிய நிலையில் இருந்து கொண்டு இருக்கிறது. பெரும்பாலான நாடுகளில் மார்க்க சுதந்திரம் பலவீனப்படுத்தப்பட்டு வருகிற நேரத்தில் ஒரு மிகச் சிறந்த கருத்தைக் கொண்டதாக ஜமாஅத் இருக்கிறது.

நம்முடைய அலுவலகத்தின் நோக்கமும் மிகவும் தெளிவானதாகும். அதாவது உலகில் மார்க்க சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்; அதனை வளர்க்க வேண்டும்; மார்க்க சுதந்திரம் என்பது ஓர் அடிப்படை உரிமையாகும்.

நீங்கள் அறிந்தது போன்று மனித உரிமைகளை பாதுகாப்பதில் கனடா ஒரு முக்கிய பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த உரிமைகள் சட்டத்துடன் தொடர்புடையவையாக இருந்தாலும் சரியே அல்லது ஜனநாயகத்துடன் தொடர்புடையவையாக இருந்தாலும் சரியே! அல்லது ஆண் மற்றும் பெண்ணுடைய சம உரிமையுடன் தொடர்புடையவையாக இருந்தாலும் சரியே!

அன்னார் கூறினார்கள் :

இன்றைய நாட்களில் மார்க்கத்தின் அடிப்படை கட்டமைப்பில் அநீதியிழைத்தல் அதிகரித்துக் கொண்டே செல்வதை நாம் பார்க்கிறோம். இந்த அநீதிக்கு எதிராக கனடா நடவடிக்கை எடுப்பதும், அநீதியிழைக்கப்பட்டவருக்கு ஆதரவாக குரலை உயர்த்துவதும் மிகவும் அவசியம் ஆகும். மார்க்கச் சுதந்திரம் என்பது மார்க்க விவகாரம் அல்ல ; மாறாக மனித குலத்தின் விவகாரம் ஆகும். நம்முடைய அலுவலகத்தின் பணி என்பது அநீதிக்கு இலக்காகும் மார்க்கங்களுடன் தொடர்புள்ள அந்த அனைத்து மக்களையும் பாதுகாப்பதாகும்.மேலும் மனித இனத்தின் மேன்மை நம்முடைய செயல்களின் மையப் புள்ளியாக இருக்க வேண்டும்.

**(தொடரும்....)**

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஜூலை 12, 2013)

தமிழாக்கம்
முஅல்லிம்
டி.ஷாஜஹான் ஸாஹிப்

* * * * * * * *

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 06 NOVEMBER 2025 Issue No.45

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

### 1-ம் பக்கத் தொடர்ச்சி (மல்ஃபூஸாத்.....)

இணைகின்றார் என்றால், மேலும் அதற்கு முன்னர் அவர் இணையவில்லை என்றால் அவரது ரக்அத் ஏற்றுக் கொள்ளப்படும்; ஒருவேளை அவர் சூரா ஃபாத்திஹாவை அதில் ஓதவில்லை என்றாலும் சரியே! ஏனெனில் ஹதீஸில் வருகிறது. எவர் ருகூவில் வந்தடைந்து விடுகின்றாரோ அவரது ரக்அத் கணக்காகி விட்டது. விவகாரம் இரண்டு பிரிவுகள் உடையதாக இருக்கின்றது. ஓரிடத்திலோ இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் சூரா ஃபாத்திஹாவை தொழுகையில் நிச்சயமாக ஓத வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்கள். அது உம்முல் கிதாப் (வேதங்களின் தாய்) ஆகும். அதுவே அசல் தொழுகையாகும். ஆனால் எவர் ஒருவர் சுயமே முயற்சி செய்த பின்னரும் தன்புறம் இருந்து வேகமாக செயல்பட்ட பிறகும் ஜமாஅத்தான தொழுகையில் ருகூவில் வந்துதான் இணைகின்றார் என்றால், மார்க்கத்தின் அடிப்படையோ எளிமை மற்றும் நன்மையைக் கொண்டதாக இருப்பதன் காரணத்தால் அவரது ரக்அத் கணக்காகி விட்டது என்று ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் சூரா ஃபாத்திஹாவை புறக்கணிப்பவர் அல்ல; மாறாக, கால தாமதமாக வந்தடைந்ததன் காரணத்தால் அவர் மார்க்கத்தால் வழங்கப்பட்ட சலுகையின்படி அமல் செய்கின்றார்; எனது உள்ளத்தை இறைவன் இவ்வாறு ஆக்கியிருக்கின்றான். அதாவது ஆகுமற்ற பணிகளில் எனக்கு வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது. நான் அதை செய்வதை எனது உள்ளம் விரும்புவதில்லை. மேலும் தொழுகையில் ஒரு நபர் 3 பகுதிகளை முழுமை செய்து விடுகின்றார்; மேலும் ஒரு பகுதியில் நிர்பந்தத்தின் காரணமாக காலதாமதமாக இணைகின்றார் என்றால் அதில் என்ன தவறு இருக்கின்றது? மனிதன் சலுகைகளின்படி அமல் செய்ய வேண்டும். ஆயினும் எந்த நபர் அறிந்து கொண்டே சோம்பலை வெளிப்படுத்துகின்றாரோ, மேலும் ஜமாஅத்தான தொழுகையில் இணைவதில் காலதாமதம் செய்கின்றாரோ அவரது தொழுகை பயனற்றதாகும். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 95 - 96, காதியான் பதிப்பு, 2018-ம் ஆண்டு பதிப்பு)

* * * * * * * *

### 1-ம் பக்கத் தொடர்ச்சி (தஃப்ஸீரே கபீர்.....)

அவர்களுடைய காஷ்மீர் பயணத்தின் பக்கம் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. ஏனெனில் காஷ்மீரீ மொழியில் காஷ்மீரை கஷீர் என்று கூறுகின்றனர். அது உண்மையில் ஒரு இப்ரானீ சொல்லாகும். அது காஃப் மற்றும் அஷீர் என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து உருவானதாகும். காஃப் என்பதன் பொருள் "போன்ற" என்பதாகும். சிரியா நாட்டை இப்ரானீ மொழியில் அஷீர் என்று கூறுவர்.

எனவே கஷீர் என்ற சொல்லிற்கு சிரியா நாட்டைப் போன்ற இடமாகும் என்பதாக இருந்தது. ஆனால், அதிக பயன்பாட்டின் காரணமாக, அலீஃப் மறைந்து விட்டது. மேலும் கஷீர் என்பது மட்டுமே மிஞ்சிவிட்டது. அதனை பிற்காலத்தில் அந்நிய சமுதாயத்தின் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக கஷ்மீராக ஆக்கிவிட்டனர். கஷ்மீரீ மொழியில் தற்போது வரை "காஷ்மீர்" கஷீர் என்றே கூறப்படுவது ஆச்சரியத்திற்குரிய விஷயமாகும். இதே போன்று எழுதப்படுகின்றது. மேலும் காஷ்மீரில் வசிக்கக் கூடியவர்களை கஷ்மீரீ மக்கள் காஷர் என்று கூறுகின்றனர். மேலும், பஞ்சாபி மக்கள் கஷ்மீரீ என்று கூறுகின்றனர். பின்னர், ஒரு காலத்தில் இப்ரானீ சமுதாயம் இந்த இடத்தில் நிச்சயமாக வசித்து இருக்கின்றது என்பதற்கு கஷ்மீர் என்ற சொல் மட்டுமே ஆதாரம் கிடையாது. மாறாக, வரலாற்று நூல்களில் இருந்து தெளிவாக இந்த விஷயம் நிரூபணமாகின்றது. அதாவது இன்றிலிருந்து 2000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு இஸ்ராயிலீ நபி காஷ்மீருக்கு வந்திருந்தார்; அவர் பனீ இஸ்ராயீலை சார்ந்தவராக இருந்தார்; அவர் நபி இளவரசர் என்று அழைக்கப்பட்டார்; அவரது கபர் முஹல்லா கானியார் வீதியில் உள்ளது. அவருடைய கபரின் பெயரால் அது பிரபல்யமாகியுள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிறுவனர் தனது புத்தகத்தில் எழுதியிருப்பதை போன்று இந்த சொல்லானது, யூஸ் ஆஸிஃப் என்பதிலிருந்து மறுவியுள்ளது. ஆஸிஃப் என்பது இப்ரானீ மொழியில் தனது சமுதாயத்தை தேடக் கூடிய நபரின் பெயராகும். மேலும் யூஸ் என்ற சொல் இயேசு என்பதிலிருந்து மறுவியுள்ளது. ஆக, ஒரு வகையில் மஸீஹ் என்ற பெயர் ஏன் வைக்கப்பட்டது என்றால், பக்தே நஸர் என்ற அரசர் எவர்களை அடிமைகளாக ஆக்கி இங்கு கொண்டு வந்திருந்தாரோ, மேலும் எவர்களை அந்த அரசர் கிழக்குப் பகுதிகளில் அதாவது அவர்களை ஆப்கானிஸ்தான் மற்றும் காஷ்மீர் பகுதியில் கொண்டு வந்து வசிக்கச் செய்திருந்தாரோ அந்த பனீ இஸ்ராயீலுடைய காணாமல் போன 10 கோத்திரங்களுக்கு இறைவனுடைய தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காகவும் இயேசு புறப்பட்டிருந்தார். மேலும், அல்லாஹ் எப்படிப்பட்ட சூழலை உருவாக்கினான் என்றால் பாலஸ்தீனில் அவர்களுக்கு எதிராக எதிர்ப்பு ஒரு பொதுவான வடிவம் பெற்றிருந்தது. எந்த அளவிற்கு என்றால், அரசாங்கத்தின் புறமிருந்து அன்னார் மீது கிளர்ச்சிக்கான வழக்கு தொடரப்பட்டிருந்தது. மேலும், அதற்காக அவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அல்லாஹ் எவ்வாறு யோனா நபியை மரணத்தின் வாயிலிருந்து பாதுகாத்தானோ அதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களையும் அவன் சிலுவை மரணத்திலிருந்து பாதுகாத்து விட்டான். மேலும், அதன் பிறகு அவர் தனது நாட்டில் வசிக்க முடியாத நிலை இருந்தது. ஏனெனில் அரசாங்கத்தின் புறமிருந்து எவருக்கு மரண தண்டனைக்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததோ, அவர் தண்டனையிலிருந்து தப்பித்து இருந்தாலும் மீண்டும் சிலுவையில் அறையப்பட்டுவிடுவார்.

எனவே அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி விட்டார்கள். பாலஸ்தீனத்திலிருந்து ஆப்கானிஸ்தான் மற்றும் காஷ்மீர் வரையிலான பாதை மிகவும் அபாயகரமானதாக இருந்த போதிலும், அங்கிருந்து அன்னார் ஹிஜ்ரத் செய்து அந்த நாடுகளுக்கு வந்தார்கள். திருக்குர்ஆனிலும் இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. அதாவது அல்லாஹ் அவர்களுக்காக காஷ்மீரை ஹிஜ்ரத்திற்குரிய இடமாக ஆக்கி இருந்தான். அது ذَاتِ قَرَارٍ وَّ مَعِيْنٍ என்பதை உண்மைப்படுத்தக் கூடியதாக இருந்தது. அதாவது அங்கு அவர்கள் எந்த விதமான எதிர்ப்பும் இன்றி அமைதியுடனும், பாதுகாப்புடனும் வசித்து வந்தார்கள். அந்த இடம் எப்படிப்பட்ட இடமாக இருந்தது என்றால், அங்கு நீரோடைகள் மட்டும் இருக்கவில்லை; மாறாக இந்த பகுதி தனது குளிர் மற்றும் பசுமையின் காரணமாக சிரியா நாட்டைப் போன்றதாக இருந்தது. அங்கு சென்றடைந்து அன்னாருடைய அனைத்து வேதனைகளும் நீங்கிவிட்டன. அவர்கள் 120 ஆண்டுகள் வரை இறைவனுடைய தூதுச் செய்தியை மக்களுக்கு எட்ட வைத்துக் கொண்டிருந்தார்கள். மேலும் இறுதியில் அவர்கள் அங்கேயே மரணம் அடைந்தார்கள். மேலும் ஸ்ரீநகருடைய கானியார் வீதியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். இன்றுவரை அன்னாருடைய கப்ர் காணப்படுகின்றது. (தஃப்ஸீரே கபீர் தொகுதி 6, பக்கம் 177, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * * *

**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad